பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 29 செவ்வாய்க்கிழமை (14.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 18

# விடாது கொட்டும் மழையால் கிழக்கில் பெரும் வெள்ளம்!

## அம்பாறை மாவட்டத்தில் அதிகம் பாதிப்பு; பல்லாயிரக்கணக்கில் பொதுமக்கள் நிர்க்கதி

அம்பாறை,டிசெம்பர்14

**கிழக்கில் கடந்த சனிக்கிழமைமுதல் விடாது கொட்டிவரும் அடைமழை காரணமாகப் பெரு வெள்ளம் ஏற்பட்டிருக்கின்றது.**

**அம்பாறை மாவட்டத்தில்தான் அதிகளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அங்கு பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.**

**பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து நிர்க்கதியாகியுள்ளன.**

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் அம்பாறை மாவட்டம் எதிர்கொண்ட கொடூர வெள்ளப்பாதிப்பு இது என சில முதியவர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களும் அடைமழையாலும் பெரு வெள்ளத்தாலும் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அம்பாறையில் பல கிராமங்களில் வடிகால் வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் வெள்ளம் தேங்கி பெரும் அவலங்கள் ஏற்பட்டுள்ளன. உள்ளூர் வீதிகளும் வெள்ளம் நிறைந்து வாகனப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையேற்பட்டுள்ளது.

பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை (தமிழ் மற்றும் முஸ்லிம்), நாவிதன்வெளி, சம்மாந்துறை முதலான பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள தாழ்ந்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்திலும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது வீடுகளைவிட்டும் வெளியேறி உறவினர் வீடுகளிலும், பாடசாலைகள், பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் நேற்றுக்காலை ஒன்பது மணி வரையான இரு தினங்களில் 190 மில்லி மீற்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை., கிளிநொச்சியிலும் மழையினால் வெள்ள நிலை

கிளிநொச்சி,டிசெ.14

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் இரவு முதல் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையால் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

ஏ-9 வீதியில் ஆனையிறவு பளைப் பகுதியில் வீதிகளை மேவி வெள்ளம் பாய்வதால், கனரக வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் பயணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பரந்தன்-முல்லைத்தீவு வீதியையும் மேவி வெள்ளம் பாய்வதால், முல்லைத்தீவுக்கான போக்குவரத்துக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள சகல வீதிகளையும் மேவி வெள்ளம் பாய்ந்த வண்ணம் இருக்கின்றது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் விபத்து: இருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.14

முகமாலையில் நேற்று மாலை இடம் பெற்ற விபத்து ஒன்றில் சிக்கி இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் - மினிபஸ்ஸும் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்ததாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சாம்பசிவம் ரகுலதரன்(வித்தகபுரம், தெல்லிப்பழை), நாராயணசாமி ராதாகிருஷ்ணன் (சுழிபுரம்) ஆகிய இருவருமே இந்த விபத்தில் உயிரிழந்தவர்களாவர். இவர்களது சடலங்கள் நேற்றிரவு யாழ்.வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

உயிர் இழந்தவர்களில் ஒருவரான ரகுலதரன் வருவாய்த்துறையில் பணியாற்றி வருபவர் எனத் தகவல் ஒன்று தெரிவித்தது.

(எ-6-12-180)

## சமாதானத்தை வலியுறுத்தி வெள்ளியன்று மக்கள் போராட்டம்

சாவகச்சேரி,டிசெ.14

சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை கைதடியில் இருந்து கொடிகாமம் வரை மக்கள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

வீதியின் இருமருங்கிலும் மக்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி நின்று சமாதானக் கோஷம் எழுப்பவிருக்கின்றனர்.

பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம் பெறவிருக்கும் இந்தப் போராட்டத்தில் தென்மராட்சியைச் சேர்ந்த சகல மக்களும் பங்கேற்கவிருக்கின்றனர்.

ஒரு மணி நேரம் இடம்பெறும் இப் போராட்டம், சமாதானத்தின்பால் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அமையும்.

அதேவேளை -

சமாதானமா? போரா? வேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் தென்மராட்சியின் பல பகுதிகளிலும் காணப்பட்டன. (எ-3-31)

## நாடாளுமன்றம் ஊடாக எஸ்.பியை விடுவிப்போம்!

### அவரைச் சந்தித்தபின் கரு சூளுரை

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் இரண்டு வருடகாலச் சிறைத்தண்டனையை அனுபவித்துவரும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கு நாடாளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கைகளை எடுக்கமுடியுமென்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். எதிர்க்கட்சியின் முழுமையான ஆதரவு சபையில் எங்களுக்கு உள்ளது. அரசமைப்பு நிபுணர்களுடன் சட்ட திட்டங்களை நன்கு ஆராய்ந்த பின்னரே நாம் இந்தத் தீர்மானத்தை எடுத்தோம்.

அதேசமயம், எஸ்.பி.திஸநாயக்க சந்தித்த கருஜயசூரிய, அப்போது மேலும் கூறியதாவது:-

சிறைவாசம் அனுபவித்துவரும் எஸ்.பி.திஸநாயக்கவைப் பார்வையிட அனுமதிக்க முடியாதென்று எம்மிடம் கூறமுடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்பு ஷரத்துக்கமைய அவர்களுக்கு சிறப்புரிமை இருக்கிறது. இதை ஆணையாளர் மட்டுமல்ல எவரும் மறுக்கமுடியாது. எஸ்.பி. இப்போது அரசியல் கைதியாகவே இருக்கின்றார். எனவே, அவரை அடிக்கடி சென்று பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அவருக்கு கண்சிகிச்சையொன்று மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கான அனுமதியை அவர் சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் கோரியிருக்கிறார். இதனை நாமும் வலியுறுத்தியுள்ளோம். மறுபுறம் அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்துமாறு நாம் கோருகின்றோம். எஸ்.பியின் பாதுகாப்பிற்கான முழுப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கலைஞர்களிடம் மன்னிப்பு கோருகின்றது இலங்கை அரசு!

கொழும்பு,டிசெ.14

இந்தியக் கலைஞர்களின் நிகழ்வில் இடம் பெற்ற குண்டுவெடிப்புக்காக அரசு மன்னிப்புக் கோரியிருக்கின்றது.

இது தொடர்பாக அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரபல இந்தியக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளை அமைதியாகக் கண்டுகளித்துக் கொண்டிருந்த மக்களின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு இலங்கை அரசு தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கிறது. இந்தக் குண்டு வெடிப்பினால் இருவர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் காயமடைந்தனர்.

இதற்காக இந்தியாவிலிருந்து வந்திருந்த கலைஞர்களிடம் இலங்கை அரசு உள்ளார்ந்த மான மன்னிப்பைக் கோருகின்றது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு இலங்கை அரசு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, காயமடைந்து சிகிச்சை பெறுபவர்கள் கூடியவிரைவில் குணம் பெறவும் வேண்டுகிறது.

இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்குப் பாதுகாப்பு அதிகாரிகள் முன்னுரிமை கொடுத்து சகல வழிகளிலும் விசாரணைகளைத் துரிதப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.செயலகம் முன்பாக

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவு கோரி மந்துவில் மக்களும் நேற்று மறியல்

யாழ்ப்பாணம்,டிசெ.14

கொடிகாமம், மந்துவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குமாறு கோரி யாழ். செயலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் யாழ். செயலகத்துக்கு முன்பாகக் கூடிய அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 500 பேர், செயலகத்தின் பிரதான வாசல் கதவுகளை மூடி மறியலில் ஈடுபட்டனர்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் மறியலைத் தொடர்ந்தனர்.

பணிக்கு வந்த ஊழியர்களை உள்ளே செல்ல மறியல்காரர் அனுமதிக்கவில்லை. இதனால் ஊழியர்கள் வெளியில் காத்திருந்தனர்.

இந்த விடயம் பொலீஸாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதையடுத்துப் பொலீ

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சுத்திகரிப்புத் தொழிலாளரின் போராட்டம் முடிவுக்கு வந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கடந்த பதினைந்து நாள்களாக நடத்தி வந்த வேலைப் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றுப் பகலுடன் முடிவுக்கு வந்தது.

குருநகர் மற்றும் திருநகர்ப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் தாக்கப்பட்டுவந்தனர் என்றும் -

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரியும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கடந்த 29 ஆம் திகதியிலிருந்து வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்தனர்.

இதற்கு யாழ். மாநகர சபை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனத் தெரிவித்து கடந்த மூன்று நாள்களாக யாழ். மாநகர சபையின் நடவடிக்கைகளை முடக்கும் வகையில் மாநகரசபையின் நுழைவாயில்களை மூடி மறியல் போராட்டத்தில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக்காலை கொட்டும் மழைக்கும் மத்தியில் தொழிலாளர்கள் மாநகரசபையின் நுழைவாயிலை மூடி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் உட்பட உத்தியோகத்தர்களும் வெளியில் காத்துநின்றனர்.

ஒரு கட்டத்தில், மாநகர ஆணையாளர் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தலைவரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

பின்னர் தமது பாதுகாப்பை உத்தரவாதப் படுத்த வேண்டும். வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த நாள் தொடக்கம் சகலருக்கும் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஆணையாளரிடம் கோரினர். இதற்கு ஆணையாளர் சம்மதித்ததை அடுத்து சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மறியல்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சொக்கனின் புகழுடல் நேற்று தீயுடன் சங்கமம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

நாட்டுப்பற்றாளர், தமிழறிஞர், கலாநிதி சொக்கனின் புகழுடல் கனத்த மழைக்கும் மத்தியில் நேற்று தீயுடன் சங்கமமானது. செம்மணி இந்துமயானத்தில் இடம்பெற்ற தகனக் கிரியையில் அவரது சிதைக்கு மகன் கொள்ளி வைத்தார்.

'தமிழ் உலகில் சொக்கன்' என அன்போடு அழைக்கப்படும் க.சொக்கலிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார். அவரது புதல்வரின் நல்லூரில் உள்ள வீட்டில் நேற்று நண்பகல் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன. தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்


(16 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மூதறிஞர் சொக்கனின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றியோரில் சிலர்.



## நாட்டுப்பற்றாளரின் இறுதிப்பயணத்தின் போது...



# சொக்கனின் இழப்பு போராடும் தேசத்துக்குப் பேரிழப்பு: அஞ்சலிக் கூட்டத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரை

யாழ்ப்பாணம்,டிசெ.14

தள்ளாத வயதிலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்ட மகான் நாட்டுப் பற்றாளர் சொக்கன் ஐயா.

- இவ்வாறு புகழ்பூத்த தமிழறிஞரும் நாட்டுப் பற்றாளருமான கலாநிதி சொக்கலிங்கத்துக்கு (சொக்கன்) புகழாரம் சூட்டியுள்ளார் தமிழீழ கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

மறைந்த நாட்டுப்பற்றாளர் கலாநிதி சொக்கலிங்கத்தின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நல்லூரிலுள்ள அவரது புதல்வரின் இல்லத்தில் நேற்று நடைபெற்றன.

அங்கு இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் நினைவுரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கவிஞர் புதுவை இரத்தினதுரை மேலும் தெரிவித்ததாவது:-

சொக்கன் ஐயா இறந்த செய்தி எமக்குப் பேரிடியைத் தருவதாய் அமைந்தது. இவரது இழப்பால் ஏற்பட்டுள்ள இடைவெளியை எப்போதும் நிரப்பிவிட முடியாது.

சில இடைவெளிகளை நிரப்பிவிடலாம். ஆனால், நிச்சயமாக இவரது இழப்பை எந்த வகையிலும் ஈடுசெய்யமுடியாது. அவரது அறிவுப்புலமும், சமூகத்தினுடைய செயற்பாட்டுத் திறனும், தமிழ் மீது அவர் வைத்திருந்த அளவல்லாத அன்பும் நீண்டகாலம் இடைவெளியாக இருக்கப்போகின்றது என்பதுதான் இந்த மண்ணின் சார்பாக எமக்கு ஏற்பட்டுள்ள கவலை.

சொக்கன் ஐயா, கவிதை எழுதினார். கட்டுரை எழுதினார். சிறுகதை எழுதினார். நாவல் எழுதினார். நாடகங்களை உருவாக்கினார். தமிழ் மொழியில் நிறைந்த புலமையுள்ளவராக இருந்தார். அவை அனைத்தும் ஒரு புறம் இருக்கட்டும் இதனை எல்லோரும் செய்கின்றனர்.

ஆனால், இவரிடமிருந்து அறியப்படாத பக்கங்கள் அதிகம் உள்ளன. ஒருசமயம் எமது போராளிகள் 9 பேர் இருபாலையிலுள்ள பகுதி ஒன்றில் வைத்து இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு, உண்ண உணவின்றி, தப்பிச் செல்ல வழியின்றித் தவித்தனர். அப்போது அந்தப் போராளிகள் இருக்கும் இடம் சென்று உண்ண உணவு கொடுத்து, பாதுகாப்பாக முற்றுகைக்குள் இருந்து மீட்டு அனுப்பிவைத்த பெருமை சொக்கன் ஐயாவுக்கு உண்டு. இதனை எமது தேசியத் தலைவருக்கு எடுத்துக் கூறியுள்ளோம்.

மனதிலே வஞ்சமில்லாது, கருத்து மோதல்கள் இல்லாமல் அனைவருடனும் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்டவர் இவர்.

சொக்கன் ஐயாவை விட சிறந்த தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பலர் தமிழ் நாட்டில் இருக்கின்றனர். ஆனால், அவர் தமிழ்மொழி மீது கொண்டுள்ள பற்று அவர்களிடம் இல்லை.

1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோருடன் இணைந்து பழந்தமிழ்ச் சொற்களை ஆய்வு செய்து புதிய கலைச் சொல்லாக்கங்களையும், புதிய தமிழ்ப் பெயர்களையும் உருவாக்குவதற்கு உதவினார். அதன் பயனாகத்தான் 46 ஆயிரம் தமிழ்ப் பெயர் அடங்கிய நூலை எமமால் வெளியிட முடிந்தது.

தமிழீழக் கல்விக் கழகத்துடனும் தமிழீழத் தமிழ் வளர்ச்சிக் கழகத்துடனும் கலைபண்பாட்டுக் கழகத்துடனும் அவர் இணைந்து மேற்கொண்ட பணிகள் பல வெளிவராதவையாகவுள்ளன. இனிமேல்தான் அவை வெளிவரப் போகின்றன. ஆனால், இந்தப் பெருமனிதனுடைய இழப்பு போராடும் தேசத்திற்கு ஒரு பேரிழப்பாகவே இருக்கின்றது.

சொக்கன் ஐயா அவர்கள் எமது தேசியத் தலைவரைச் சந்திப்பதற்கு இரு தடவைகள் வசதிசெய்து கொடுத்துச் சந்தித்துக் கலந்துரையாட வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். அதன்பின், அவர் எமது தலைவர் மீது இறுக்கமான அன்பை வைத்திருந்தார். இவர் எழுதிய "சங்கிலியன் காலம் தொட்டு பிரபாகரன் காலம் வரை" என்ற நீள் தொடர் கட்டுரையில் அதனை அவர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் - என்றார் அவர்.

### அருண் மாஸ்டர்

தமிழீழக் கல்விக் கழகத்துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

மொழி, இனம், சமூகப் பற்றுள்ளவராகவும், ஒரு நல்ல மனிதனாகவும் சமூகத்திற்கு எடுத்துக் காட்டக்கூடிய ஒரு வரலாற்று மனிதனாகத் திகழ்ந்தவர் நாட்டுப்பற்றாளர் சொக்கன் ஐயா.

நாட்டுப்பற்றாளர் சொக்கன் ஐயாவின் சாவுச் செய்தி இடி விழுந்தது போல் எம்மையெல்லாம் நெறிபிறழ வைத்தது. இந்தச் செய்தியை எமது கல்விக்கழப் பொறுப்பாளர் இளங்குமரன் அறிந்ததும் சில நிமிடங்கள் எந்தவிதமான பேச்சுக்களும் இன்றி மௌனமாகவிருந்தார்.

எத்தனை சாவுகளை நாம் சந்தித்திருப்போம். எம்முடைய மாவீரர்களின் சாவினால் எம் இதயம் இரும்பாய் இருந்தது. ஆனால், சொக்கன் ஐயாவின் சாவுச் செய்தி எமது கல்விக் கழகப் பொறுப்பாளருடைய கண்களிலிருந்தும் நீர்த்துளிகளை வரவழைத்ததை அவதானிக்க முடிந்தது. அந்த அளவிற்கு சொக்கன் ஐயாவுடைய உறவு எமது கல்விக் கழகப் பொறுப்பாளருடன் இருந்தது என்பதை அவருடன் பழகியவர்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது அதனுடன் இணைந்து மொழிவளர்ச்சிக்காக எமது கல்விக் கழகப் பொறுப்பாளருடனும், நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தியுடனும் ஏனைய துறைசார்ந்த கல்வி ஆய்வாளர்கள் மற்றும் மொழிப் பற்றாளர்களுடனும் இணைந்து பல ஆக்கங்களைச் செய்து தந்திருக்கின்றார் - என்றார் அவர்.

### பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்

தென்னிந்தியச் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தமது அஞ்சலி உரையில் தெரிவித்ததாவது:-

எமது நாட்டில் இன்னும் நாங்கள் தூய தமிழை மறந்துவிடாது சுத்தமாக எழுதுவதற்கு சொக்கன் போன்ற உண்மையான தமிழர்களே காரணமாக விளங்குகின்றனர்.

தமிழ் தேசத்தின் மீது, அதாவது நம் நாட்டின் மீது உண்மையான பற்றுக் கொண்ட ஒரு பெரியார் இவர். இவரின் மறைவு எமது சமுதாயத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

சொக்கன் ஐயாவுடைய தமிழ் அன்பும், பற்றும் என்னை மிகவும் கவர்ந்தது. அவரும் நானும் பல வருடங்களாக ஆரிய, திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தில் பணியாற்றிருந்தோம்.

நான் அவரைப் பெரிதும் மதிக்கிறேன். அவர் ஒரு சிறந்த ஆன்மீகவாதியாக இருந்தாலும் அனைத்துச் சமயங்களையும் பெரிதும் மதித்தவர்.

எமக்கு சொக்கன் ஐயா சொல்ல விரும்பிய செய்தி எமது நாட்டை, மொழியை, நேசியுங்கள், மொழியை ஐயந்திரிபறக் கற்றுக் கொள்ளுங்கள் என்பது தான் - என்றார்.

### பேராசிரியர் அ.சண்முகதாஸ்

யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கூறுகையில் -

தேசப்பற்றாளர், இலக்கிய கர்த்தா, மூதறிஞர், உண்மைகளை நேசித்த சொக்கன் ஐயாவின் வாழ்வு முடிந்துவிட்டது. ஆனால், அவரின சரித்திரம் இப்போது தான் ஆரம்பமாகின்றது.

சொக்கன் ஐயா எல்லோரிலும் பார்க்க இந்நாட்டு இளைஞர்களை, மாணவர்களை நன்கு நேசித்தவர். அவரின் கல்வி ஒரு கல்வியாகவே இருந்தது. தமிழையும், இலக்கியத்தையும், சங்கீதத்தையும் படிப்பித்தவர். நாஙகள் செய்யவேண்டியது எதிர்காலத்தில் மாணவர்களுக்கு சாதாரண நிலையிலிருந்து உன்னதமான நிலைக்கு வந்த மனிதர் பற்றிக் கூறும்போது - தமிழை நன்றாகக் கையாண்டவர் பற்றிக் கூறும்போது - சொக்கன் ஐயாவைப் பற்றிக கூறினால் அவர் என்றும் வாழ்வார் - என்றார்.

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசியர் சு.மோகனதாஸ், எழுத்தாளர் சார்பாக செங்கை ஆழியான் (கலாநிதி க.குணராசா), அகில இலங்கைக் கம்பன் கழகம் சார்பாக வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரச அதிபர் எஸ்.ஜெயசீலன், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி ப.தனபாலன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி க.திருநாவுக்கரசு, கிராம சேவையாளர் எஸ்.கிருஷ்ணராசா, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் உட்பட பலர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினார்.

இந்த அஞ்சலி நிகழ்விலும், இறுதிக் கிரியைகளிலும் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-5-202)



# இனிய இசை நாதம் நிசப்தமானது

கர்நாடக சங்கீத இசையில் தனி சாம்ராச்சியம் நடத்தி கோடிக்கணக்கான ரசிகர்களின் இதயத்தை இதமாக்கிய இசைப் பேரரசி எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இறுதிக்கிரியை நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இசைக் கலைஞர்கள், அரசியல் தலைவர்கள் உட்படப் பெருமளவானோர் திரண்டு வந்து அவரின் பூதவுடலுக்கு கண்ணீர்மல்க இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

அந்த நிசப்த காட்சிகள் இதோ....




முதலமைச்சர் ஜெயலலிதா....

எம்.எஸ்.விஸ்வநாதன்...



குன்னக்குடி, பி.பி.ஸ்ரீநிவாஸ்...



குடியரசுத் தலைவல் அப்துல் கலாம்...



அணிவகுப்பு மரியாதை...



இறுதி ஊர்வலம்



கருணாநிதி...



ஜானகி...

# அதிபர் புஷ்ஷுக்கு உடற்பரிசோதனை கடற்படை ஆஸ்பத்திரியில் நடந்தது

வாஷிங்ரன்,டிசெ.14

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் வருடாந்த உடற்பரிசோதனை வாஷிங்ரன் புறநகர்ப் பகுதியான பெத்தேஸ்டா நகரில் உள்ள தேசிய கடற்படை ஆஸ்பத்திரியில் நடந்தது.

உடற்பரிசோதனை, தேர்தல் பிரசாரம் காரணமாக 4 மாதம் தாமதமாக இப்போது நடந்துள்ளது.

டாக்டர் ரிச்சர்ட்டப் தலைமையில் 10 டாக்டர்கள் இந்தச் சோதனையை நடத்தினர். அவர் முழு உடற தகுதியுடன் இருப்பதாக டாக்டரகள் சான்றிதழ் வழங்கியுள்ளனர். உடல் எடை கூடுதலாகிவிட்டதாக புஷ் கூறினார்.

உடற பரிசோதனையின் முழு விவரம் பின்னர் வெளியிடப்படும் என்றும் வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு உடல் பரிசோதனையின் போது அவரின் உடல் எடை 194 பவுண்ட் இருந்தது இப்போது கொஞ்சம் கூடுதலாகிவிட்டது.

உடம்பைக் கட்டுக்குலையாமல் வைத்திருக்க ஓடுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்த புஷ், முட்டுவலிக்கு பிறகு அதைக் கைவிட்டார். இப்போது மலைப்பகுதியில் சைக்கிள் ஓட்டுவது போன்ற வேறு உடற்பயிற்சிகளைச் செய்து வருகிறார். (8)

# இங்கிலாந்து நடிகைக்கு ஐரோப்பிய ஒஸ்கார் விருது

பார்சிலோனா,டிசெ.14

'ஐரோப்பிய ஒஸ்கார்' எனப்படும் ஐரோப்பிய சினிமா விருது வழங்கும் விழா ஸ்பெயின் நாட் டில் பார்சிலோனா நகரில் நடந்தது.

ஸ்பெயின் நாட்டு நடிகர் ஜாவியர் பார்டம் சிறந்த நடிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மார் அடென்ரோ படத்தில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு சாவதற்கான உரிமைக்காக 30ஆண்டுகளாகப் போராடி வரும் ஒரு நோயாளியாக இவர் சிறப்பாக நடித்திருந்தார்.

இங்கிலாந்து நடிகை இமெல்டா ஸ்டான்டன் சட்டத்துக்குப் புறம்பாக கருக் கலைப்புச் செய்யும் பெண்ணாக வெரா ட்ரேக் படத்தில் சிறப்பாக நடித்ததற்காக சிறந்த நடிகையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வயதான மனிதனுக்கு மனைவியாகி கஷடப்படும் ஒரு துருக்கிப்பெண், குடும்பத்தை விட்டு ஜேர்மனிக்குத் தப்பி ஓடிவிடும் கதையைக் கொண்ட 'கெகன் டை வாண்ட்' சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தப் படத்தை இயக்கிய படிக் சுகின் சிறந்த இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மொத்தம் 44 படங்கள் விருதுக்கான போட்டியில் பங்கு கொண்டன.

ஐரோப்பா நாட்டைச் சேராத படங்களில் சிறந்த படமாக '2046' சீனப்படம் தேர்வு பெற்றது. (8)

# போர்த்துக்கல் நாடாளுமன்றைக் கலைத்தார் அந்நாட்டு ஜனாதிபதி

லிஸ்பன்,டிசெ.14

போர்த்துக்கல் நாட்டு ஜனாதிபதி சம்பையோ, நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டார். அது அமைக்கப்பட்ட 5 மாதங்களில் கலைக்கப்பட்டுவிட்டது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்த நிலையில் பிரதமர் பெட்ரோ சாண்டனா லோபஸ்சும் அவரது அமைச்சர்களும் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

லோபஸ் பிரதமராக 5 மாதங்கள் மட்டுமே ஆட்சி செய்தார். இவர் இடைத்தேர்தல் நடக்கும் வரை காபந்து ஆட்சி நடத்துவார். (8)

உலக அரங்கில்

# 250 கிலோ நிறையுடைய குண்டை ஈராக்கில் வீசியது அமெரிக்கா

## மொசூல் நகரம் அதிர்ந்தது

மொசூல்,டிச.14.

ஈராக்கில் உள்ள மொசூல் நகரில், அமெரிக்க போர் விமானம் ஒன்று 250 கிலோ எடை உள்ள வெடிகுண்டு ஒன்றை வீசியது. இதில் ஈராக் தீவிரவாதிகள் பலியானார்கள்.

ஈராக் நாட்டில் மொசூல் நகரில் தீவிரவாதிகள் ஆயுதக் கிடங்கை கைப்பற்ற அமெரிக்க இராணுவத்தின் ரோந்துப்படை முயற்சி செய்தது. இதனால் ஆத்திரம் அடைந்த தீவிரவாதிகள் அந்தப்படையை தாக்கினர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கப் போர் விமானம் ஒன்று 250 கிலோ எடை உள்ள குண்டை வீசியது. மொசூல் நகரத்தை உலுக்கும் வகையில் அந்தக் குண்டு வெடித்தது. இதில் தீவிரவாதிகள் பலர் இறந்து போய்விட்டனர் என்றும், எட்டு இராணுவ வீரர்கள் காயம் அடைந்தனர் என்றும் அமெரிக்க இராணுவத் துணைத் தளபதி பால்ஹேங் டிங்க்ஸ் கூறினார். இருந்தபோதிலும் இராணுவம் தீவிரவாதிகளின் ஆயுதக் கிடங்கை அழித்துவிட்டது.

ஈராக்கின் இன்னொரு பகுதியில் நடந்த தீவிரவாதிகளின் தாக்குதலில், 3 பொலீஸ் உயர் அதிகாரிகள் உட்பட 10 பொலீஸார் கொல்லப்பட்டனர். (8)






## கால்நடைத் திணைக்கள அலுவலகம் இடம்மாறியது

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் இதுவரை காலமும் இயங்கிவந்த யாழ்.கால்நடை வைத்தியசாலையும் வடக்கு உதவிப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்களமும் கடந்த 6ஆம் திகதியிலிருந்து புதிய இடத்துக்கு இடமாற்றஞ் செயயப்பட்டுள்ளன.

தறபோது பலாலி வீதி, இலக்கம் 280 இல் புதிய முகவரிக்கு அவை மாற்றப்பட்டுள்ளன என்று வடக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (3-7)


## கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் மூத்த உறுப்பினர்

**கனகரத்தினம் பாலசிங்கம்**

அவர்கள் காலமாகியதையிட்டு மனம் வருந்துகின்றோம். அன்னாரின் மறைவு பேரிழப்பாகும். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆத்மா சாந்திபடைய கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.

- ஆலய பரிபாலன சபையினர்.

(39626) (42-16-19)


## திருத்தம்

கடந்த 11ஆம் திகதி உதயனில் 4 ஆம் பக்கத்தில் வெளியாகிய -

**சேகரம்பிள்ளை இரத்தினம்**

என்பவரது நினைவஞ்சலி விளம்பரத்தில் - இரண்டாம் ஆண்டு நினைவலைகள் என்ற தலைப்பில் அச்சுத்தவறு ஏற்பட்டுவிட்டது. அதைத் திருத்தி வாசிக்கவும்.

(ஆ-ர்)


## தொடர்பு கொள்ளவும்

இந்திய ஸ்தபதி திரு.மணிகண்டன அவர்களை எம்முடன் உடனடியாகத் தொடர்புகொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**உருத்திரா பொறியியல் கட்டடக் கலை மதியுரை அகம்,**
06, நல்லூர் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. இல.222-5534.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

*கட்டணம் 1000/=வுடன் மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில. By. விக்னேஸ்வரன் ஆச்சாரி.* காலை வகுப்புகள்.

**426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்

### பி.எ.ஸ்ரனிஸ்லோஸ்

(மறவன் மாஸ்ரர்)

தாளையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட பி.எ.ஸ்ரனிஸ்லோஸ் (மறவன் மாஸ்ரர்) அவர்கள் 11.12.2004 இல் காலமானார்.

அன்னார் திருமதி மாசில்லா ஸ்ரனிஸ்லோஸ் அவர்களின் அன்புக் கணவரும் லங்கநாயகம், குமுதினி, அமுதினி ஆகியோரின் தகப்பனாரும் தீபம், அந்தோனிக்கம்மா, ஜோசப், கிறிஸ்ரா, இருதயம் ஆகியோரின் சகோதரனும் மரியதாஸ், தாசீசியஸ், விமலா, காலஞ்சென்ற ஜெறோமியாஸ், சுகிர்தராணி, வண.பிதா பேணாட், ஞானம், ஜெஸ்லின், கலிஸ்ரா, மலர்ராணி ஆகியோரின் மைத்துனரும் லதா, டனி, அன்ரன் ஆகியோரின் மாமனும் பிரியா, எழில்மறவன், அபினாஷ், அசிடா, அஸ்வீனா ஆகியோரின் பேரனுமாவார்.

இவருடைய வித்துடல் நாளை (15.12.2004) புதன்கிழமை மாலை தாளையடியிலுள்ள அவருடைய இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இறுதிச் சடங்குகள் 16.12.2004 வியாழக்கிழமை பி.ப.12.30 மணிக்கு இல்லத்தில் ஆரம்பமாகி, புனித அந்தோனியார் ஆலயத்தில் நிறைவுபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்.

*யாழ்.பல்கலைக்கழகம்,*
*நல்லாயன் நிலையம்,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
வணபிதா. அ. இ. பேணாட்
(மைத்துனன்)
(C/395 88)(42-6-19)






## தென்மராட்சியில் கல்விச் செயலமர்வுகள்

தென்மராட்சி,டிசெ.14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுககான தொடருறு கல்விச் செயலமர்வுத் திட்டத்தின் கீழ் இடைநிலைப்பிரிவு, ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளையும் நாளைமறுதினமும் வரணி ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளன.

நாளை புதன்கிழமை இடைநிலைப் பிரிவு ஆசிரியர்களுக்கான 'பிரச்சினை விடுவித்தல் முறை' என்னும் தலைப்பிலான செயலமர்வும் -

நாளைமறுதினம் வியாழக்கிழமை ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கான 'ஆரம்ப கணிதத்தில் தவறுகள பற்றிய பகுப்பாய்வு' என்னும் தலைப்பிலான செயலமர்வும் - நடைபெறவுள்ளன.

வலயத்திற்குட்பட்ட ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் பொருத்தமான பாட ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வசெல்வராசா கேட்டுள்ளார். (3-117-202)

## கோப்பாயில் முத்திரையிடும் பணி

கோப்பாய்,டிசெ.14

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சந்தை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சகல வர்த்தகர்களினதும் நிறுத்தற் கருவிகளுக்கு முத திரையிடும் பணி நடைபெறவுள்ளது.

இன்றும் நாளை மறுதினமும் எதிர்வரும் 17ஆம் திகதியும் வலி.கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உபஅலுவலகத்திலும் -

எதிர்வரும் 20, 21, 23 ஆகிய திகதிகளில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் கோபபாய் உப அலுவலகத்திலும் -

எதிர்வரும் 27ஆம திகதி வலி.கிழக்குப் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்திலும் -

காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை முத்திரையிடும் பணி இடம்பெறவுள்ளது என கோப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (3-72-202)

உதயன்

## ஐ.நா. செயலர் பதவிக்கு இலங்கைப் பிரமுகர்

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய செயலாளர் நாயகம் பதவிக்கு ஒருவரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் 2006ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கின்றது.

புதிய செயலாளர் நாயகத்தின் பதவிக்காலம் 2007 ஜனவரியில் ஆரம்பமாகின்றது.

இத்தேர்தலில் இலங்கையரான ஜயந்த தனபாலவை நிறுத்த இலங்கை தீர்மானித்திருக்கின்றது.

இலங்கைத்தீவைப் பொறுத்தவரை சர்வதேச மட்டத்தில் அதன் பெருமையையும் கௌரவத்தையும் உயர்த்துவதற்குக் கிடைத்த நல்லதொரு வாய்ப்பு இது.

ஜயந்த தனபால கற்றறிந்த புத்திஜீவி. அறிவோரால் நன்கு மதிக்கப்படும் இராஜதந்திரி. சர்வதேச மட்டத்தில் மிகவும் போற்றப்படும் அனுபவசாலி. இவையாவற்றுக்கும் அப்பால், இலங்கையின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம்.

இவரைவிட, இப்பதவிக்கு இலங்கை பிரேரிப்பதற்குப் பொருத்தமானவர்கள் வேறு யாரும் இலங்கைத் தீவில் இருக்கமாட்டார்கள் என்று கூறுவது தப்பாகிவிடாது.

ஆனால், இத்தகைய பழுத்த இராஜதந்திரியை - சர்வதேச மட்டத்தில் மிகவும் மதிக்கப்படுகின்ற ஒருவரை - ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்குப் பிரேரிக்கும் தகைமையும், சிறப்பும் இலங்கை அரசுக்கு உண்டா என்பதே கேள்வியாகும்.

உலகின் பல்வேறு நாடுகளினதும் மட்டுமன்றி, தனிப்பண்புடைய இனக் குழுமங்களினதும், மக்கள் கூட்டங்களினதும் தனித்துவம், சுயாதீனம், சுதந்திரம், தாயகம், கௌரவம் போன்றவற்றைப் பேணிப் பாதுகாப்பதை உறுதிப்படுத்தும் உயரிய பொறுப்பும் கடமையும் ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்தது.

அந்தச் சபையை அச்சாக - மூலவேராக - இருந்து இயக்குபவர் அதன் செயலாளர் நாயகம்.

அந்தவகையில் பார்த்தால், உலக நாடுகளின் இறைமைகளையும், தனி இனக் குழுமங்களின் அடிப்படை உரிமைகளையும் ஒரே சமயத்தில் பேணிப் பாதுகாக்கும் பொறுப்புக்குப் பதில்கூற வேண்டியவர் ஐ.நா. செயலாளர் நாயகம்தான்.

அத்தகைய பொறுப்புச் சொல்லக்கூடிய பதவிக்குப் தனது பிரஜை ஒருவரின் பெயரைப் பிரேரிக்கக் கூடிய தகுதியும் தகைமையும் தனக்கு உண்டா என்பதை இலங்கை சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

தனது நாட்டுக்குள்ளேயே சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி, அவர்களின் அடிப்படை உரிமைகளையும், வாழ்வியலுக்கான, இருப்புக்கான உரிமைகளையும் மறுத்து உலக நாடுகள் மத்தியில் தவறான போக்குக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது இலங்கை அரசு.

இனப்பிரச்சினை காரணமாகக் கடந்த இரு தசாப்தங்களாக இலங்கைத்தீவில் நடந்த கொடூரப் போரை நிறுத்தி, அமைதி வழியில் - சமாதான முறையில் - இனப்பிணக்குக்கு இணக்கத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு, இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு முன்வந்து காத்து நிற்கின்றது. அதை உதாசீனம் செய்து, அமைதி முயற்சிகளை மூழ்கடித்து, பௌத்த சிங்கள மேலாண்மை வாதத்தில் ஊறித் திளைத்து, சிறுபான்மையினரைத் தொடர்ந்து அடக்கி, ஒடுக்குவதற்குக் கங்கணம் கட்டி நிற்கிறது இலங்கை அரசுத்தரப்பு.

அமைதி முயற்சிகளுக்கான வாய்ப்புகளை மூழ்கடித்து நிற்கும் இந்த அரசின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பதவியை கௌரவ அடிப்படையில் ஏற்றுச் செயற்பட்டு வருகின்றார் ஜயந்த தனபால.

அவர் நல்லவராக இருக்கலாம். திறமைசாலியாக இருக்கலாம். அறிவு ஜீவியாகவும், பண்புள்ளவராகவும் ,நேர்மையுடையவராகவும் இருக்கலாம்.

ஆனால், இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் பதவியை அவர் ஏற்றபின்னர் இதுவரை சமாதான முயற்சிகள் ஆக்கபூர்மான திசைகளில் கிஞ்சித்தும் முன்னேறவில்லை.

உள்நாட்டில் அமைதி முயற்சிகளைச் சற்றும் முன்நகர்த்த முடியாதவர்தான் சர்வதேச ரீதியில் அமைதியையும் சமாதானத்தையும் முன்னெடுக்கப் போகின்றார் - உலக அமைதியையும் சர்வதேச சமாதானத்தையும் உறுதிப்படுத்தும் உலகின் உயர்ந்த பதவியை அலங்கரிக்கபோகின்றார் - என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன' கதை மாதிரித்தான் இது அமையும்.

தாம், ஐ.நா. செயலாளர் பதவிக்கு தெரிவானால் அது இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு ஊக்கம் தருவதாக அமையும் என்று ஜயந்த தனபால கூறியிருக்கின்றார். ஆனால், அது அப்படியல்ல. நிலைமை தலைகீழாகத்தான் உள்ளது.

இலங்கை அமைதி முயற்சிகளில் ஜயந்த தனபால தலைமையிலான இலங்கை அரசின் சமாதானச் செயலகம் ஆக்கபூர்வமான முன்நகர்வுகளைக் காட்டமுடியுமானால், ஜயந்த தனபால ஐ.நா. செயலர் பதவிக்குத் தெரிவாவதற்கான வாய்ப்பை அது பிரகாசப் படுத்தும் என்பதே உண்மை; யதார்த்தம்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு செயற்பட ஜயந்த தனபாலவும், அவரை ஐ.நா.பதவிக்குப் பிரேரிக்கும் இலங்கை அரசும் முன்வருவது நல்லது.

### கரவெட்டிப் பிரதேச
## மாதர் கிராமிய அபிவிருத்தி சங்கங்களுக்கு ஜீவனோபாயக் கடனாக 34 லட்சம் ரூபா

தென்மராட்சி, டிசெ.14

கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள ஏழு மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் 231 அங்கத்தவர்களுக்கு ஜீவனோபாயக் கடனாக சுமார் 34 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (நியாப்) சுழற்சி முறைக் கடனாக இந்த நிதியை வழங்கியுள்ளது.

துன்னாலை மேற்கு மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் 32 பயனாளிகளுக்கு 4லட்சத்து 82 ஆயிரம் ரூபாவும்-

அத்தாய் மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் 29 பயனாளிகளுக்கு 4லட்சத்து 71 ஆயிரத்து 500 ரூபாவும்-

உடுப்பிட்டி தெற்கு மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் 32 பயனாளிகளுக்கு 4லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும்-

மத்தொனி மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் 40 பயனாளிகளுக்கு 4லட்சத்து 78 ஆயிரம் ரூபாவும் -

உடுப்பிட்டி மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் 30 பயனாளிகளுக்கு 4லட்சத்து 70 ஆயிரத்து 750 ரூபாவும்-

துன்னாலை தெற்கு மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் 39 பயனாளிகளுக்கு 4லட்சத்து 98ஆயிரத்து 200 ரூபாவும் -

அந்தணத்திடல் மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் 28 பயனாளிகளுக்கு 4 லட்சத்து 71 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன்கள் மீளப்பெற்று மாதாந்தம் மேலும் அங்கத்தவர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டு வருவதாகப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ.பரராஜசேகரம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரதேசத்தில் உள்ள ஐந்து கிராமங்களில் பொது நோக்கு மண்டபங்கள் அமைக்கவும் நியாப் நிதி உதவி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10 - 117)

## ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேச்சுக்களை நடத்தவுள்ளார்

ஆசிரியர் தொழிற்சங்கங்களின் உயர் மட்டப் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை மறுதினம் வியாழக்கிழமை நேரடியாகச் சந்தித்துப் பேசவுள்ளார். இதற்கான அழைப்புக்களை தொழிற்சங்கங்களுக்கு ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ளார்.

நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்துவரும் ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்து இச்சந்திப்பில் ஆராயப்படவிருக்கிறது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உட்பட ஐந்து முன்னணி ஆசிரியர் சங்கங்களுக்கு அழைப்புக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சங்கங்களின் சார்பிலும் இரண்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல வருடங்களாகத் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் பல்வேறு பிரச்சினைகளை இச் சந்திப்பின்போது ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவர இருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார். (10-11)

## வடக்கு மீள்குடியமர்வு குறித்து ஆராய முஸ்லிம் புத்திஜீவிகள் - புலிகள் சந்திப்பு

### தமிழ்க் கூட்டமைப்பு ஏற்பாடு செய்ய இணக்கம்

கொழும்பு.டிசெ.14

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மீள் குடியமர்வது தொடர்பாக வடக்கு முஸ்லிம்களின் புத்திஜீவிகள் விடுதலைப் புலிகளைச் சந்திக்கவிருக்கின்றனர்.

வடக்கு முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கடந்த சனியன்று நடந்த சந்திப்பில் இது விடயம் தொடர்பாக முடிவு செய்யப்பட்டது.

வடக்கு முஸ்லிம் பிரதிநிதிகள் வன்னி புனர்வாழ்வு அமைச்சர் ரிஷாத் பதூர்தீன் தலைமையிலும், கூட்டமைப்பினர் மாவை சேனாதிராசா தலைமையிலும் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடந்த இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளை வடக்கு முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதாகக் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்த அரச செயலகங்களில் விசேட பிரிவுகளை அமைப்பது என்றும்-

முஸ்லிம் - தமிழ் மக்களிடையே நிலவும் சந்தேகங்களை, முரண்பாடுகளை நீக்குவதற்கு ஏற்பாடு செய்வது என்றும்-

இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுப்பது என்றும் சந்திப்பில் இணக்கம் ஏற்பட்டது.



இந்தியாவின் ரிஷிகேசத்து ஞானபீட சுவாமி யோகேஸ்வரானந்தா கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

இவர், யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையும் ஆன்மீக விழிப்புணர்வு வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்த ஆன்மீகப் பேருரை நிகழ்வில் கலந்துகொண்டு பேருரைகளை நிகழ்த்தினார். நேற்றுமுன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் சுவாமி யோகேஸ்வரானந்தா பேருரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (10-7-15)

## மணிமேகலைப் பிரசுரக் கண்காட்சி யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.டிசெ.14

சென்னை மணிமேகலைப் பிரசுரத்தினரின் புத்தகக் கண்காட்சி யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று ஆரம்பமாகியது.

அமரர் தமிழ்வாணன், கல்கண்டு சஞ்சிகையின் ஆசிரியர் லேனா தமிழ்வாணன் மற்றும் இலங்கை எழுத்தாளர்கள் ஆகியோரின் ஆயிரக்கணக்கான நூல்களின் விற்பனைக் கண்காட்சி இது. காலை 8.30மணி முதல் மாலை 6மணிவரை கண்காட்சி நடைபெறும்.

கணனி, வாழ்வு முன்னேற்றம், வீடு கட்டுதல், மொழி, அகராதி, சமயம் பக்தி, யோகாசனம், மருத்துவம், உடல்நலம், ஜோதிடம், பருசாங்கம், வணிகம், இலக்கியம், இலக்கணம், இசை, கலை, சிறுகதைகள், சங்கர்லால் துப்பறியும் நாவல்கள், சமையல், தையல், அரசியல், போர்க்கலை, அறிவியல் எனப் பல்துறை நூல்கள் இக் கண்காட்சியில் இடம்பெறுகின்றன.

இந்தியாவிலிருந்து மணிமேகலைப் பிரசுரத்தின் நிர்வாக இயக்குநர் ரவி தமிழ்வாணன் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வந்திருக்கிறார். நேற்று ஆரம்பமாகிய கண்காட்சி தொடர்ந்து இன்றும் நடைபெறும்.

(ஐ-12)

### உதயவாக்கு

உற்ற சமயத்தில் உதவுவதே உண்மையான உறவு.

### நாளை

கார்த்திகை 30
புதன்கிழமை
(15.12.2004)
திதி: சதுர்த்தி
பின்னிரவு 10.33
நட்சத்திரம் : உத்தராடம்
முற்பகல் 09.05
சுபநேரம்: 04.52 - 06.22
ராகுகாலம்: 12.22 - 01.52
(பழையநேரப்படி)

## வலி.மேற்கில் 61 திட்டங்களுக்கு எம்.பிக்கள் நிதி ஒதுக்கீடு

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திக்கென பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் 61 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ந.ரவிராஜ், பத்மினி சிதம்பரநாதன், சி.கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.கே. சிவாஜிலிங்கம், சுரேஷ்பிரேமச்சந்திரன், மா.க.ஈழவேந்தன், பு.சிவநேசன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோராலேயே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்வித்துறை, விளையாட்டுத்துறை, கிராம அபிவிருத்திக் கட்டடப் புனரமைப்புகள் என 61 திட்டத்திற்கு இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-203-161)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வளர்ப்பு மீன்கள், தொட்டிகள், அலங்காரப் பொருள்கள், பல இனக் குருவிகள், கூடுகள், பூங் கன்றுகள், சாடிகள், பொம்மேரியன் நாய்க் குட்டிகள் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சனியர் லேன், தட்டாதெருச் சந்தி அருகில், யாழ்ப்பாணம். (39572)

## காணி, வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கு, மானிப்பாயில் எச்சாட்டி வைரவர் கோயிலுக்குப் பக்கத்தில் நிறைந்த பயன்தருமரங்களுடன் 4அறைகளுடன் கூடிய வீடுடைய 8பரப்புக் காணி உடனே விற்பனைக் குண்டு. தொடர்பு: ஆசீர்வாதம் இம்மனுவேல் மேரி யோசப், சுதுமலை தெற்கு, மானிப்பாய். T.P.: 0777 163169. (39623)

## நாய் விற்பனைக்கு

7½ மாதங்கள் வளர்ந்த, சுறுசுறுப்பான காவலுக்குரிய **Doberman Pincher** ஆண் நாய் **Pedigree** (வம்சாவளி) உடன் விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு: No. 220, கண்டி றோட், யாழ்ப்பாணம் (பெண்டிகொஸ் தேவாலயத்திற்கு அருகில்) 077 6512285, 077 - 6183106. (39608)

## தவறிவிட்டது

தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த ச.சிவகடாட்ஷக் குருக்கள் பிரபாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (781332879V), வாகன வரி, காப்புறுதிப் பத்திரங்கள் அடங்கிய சிறு பை சனிக்கிழமை (11-12-2004) யாழ்ப்பாண சிவன்கோயில் சந்திக்கும் குளப்பிட்டிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரிக்கோ அல்லது T.P.: 021 222 2558 இலக்கத்திற்கோ அறியத் தரவும். (39622)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 31 வயது, மிருகசீரிடம், 12இல் செவ்வாயுள்ள, கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு படித்த, அழகிய, உயரமான மணமகள் தேவை. ஜாதகக் குறிப்பு, படம் முதலியவற்றுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2454, மே/பா உதயன். (39627)

# பெண்களுக்கான பொருளாதாரத் திட்டம்

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நிதி சேர்ப்பு

**பெண்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. அதன் ஒரு நடவடிக்கையாக *'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்'* என்னும் நாடகம் எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. பெண்களுக்கான பொருளாதாரத் திட்டம் தொடர்பாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் விடுத்த செய்திக் குறிப்பு இது.**

எமது நாட்டினுடைய போர் அனர்த்தங்களும் இடப்பெயர்வுகளும் எமது சமுதாயத்தைப் பாதிப்படைய வைத்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் பெணகளாகவே உள்ளனர். இங்கு எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் பாதிப்புக்களில் இருந்து மீள் திரும்புவதற்கு முன்பே போரற்ற காரணிகளாலும் சவால்களை எதிர்கொண்டுள்ளனர் இவர்கள்.

☆ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்.
☆ குடும்பத் தலைமைத்துவத்தை தாங்கும் முதிர் கன்னியர்கள்.
☆ பொருளாதார சூழ்நிலையால் கல்வியில் பாதிப்படைந்த/இடைவிலகிய பெண்கள்
☆ குறைந்தளவு வருமானத்திற்காக கடின உழைப்பில் ஈடுபடும் பெண்கள்.
☆ வருமானம் போதாமையால் வறுமையை எதிர்நோக்கும் பெண்கள்.

எனப் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள பெண்கள் தமது எதிர்கால செயறபாடுகளை நடைமுறைப்படுத்த முடியாமல் ஏக்கததுடன் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவற்றுக்கும் மேலாக,

☆ எமது நாடு பொருளாதார வீழ்ச்சிகளைக் கண்டுள்ளது.
☆விலைவாசிகளும் விலை ஏற்றங்களும் வரையறைபற்றவையாகவும் உள்ளதைக் காணக கூடியதாக உள்ளது.

இதன் மூலம் பெண் தலைமைத்துவ குடும பங்களும் பாதிப்புக்குள்ளான பெண்களும்




☆ அடிப்படைத் தேவையினைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளனர்.
☆பிள்ளைகளுடைய கல்வித் தேவையை நிறைவேற்ற முடியாதவர்களாக உள்ளனர்.
☆ சமூகத்தின் விடுப்பார்வத்தால் துன்பப் படுகிறார்கள்.
☆அடக்குமுறைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.
☆ வருமானமின்றி அவதிப்படுகிறார்கள்.

இவ்வாறான பாதக விளைவுகள் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை குறுக்கிடுகின்ற போது அவர்கள்,

✷ நம்பிக்கையீனம்
✷ பயம்
✷ தாழ்வு மனப்பான்மை

என்பவறறில் அடிமையாவதைக் காணக் கூடியதாக உள்ளது.

எனவே, எமது நிறுவனம் கடந்த 25 வருடங்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றி வந்த கடமையிலிருந்து பெற்ற அனுபவம் மூலம் பெண்களுக்கான திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் பிரகாரம், பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் இனம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் வருமானம் ஈட்டுவதற்கான சுயதொழில் ஒன்றை ஆரம்பிக்க விரும்புகிறார்கள். ஆயினும், அவர்களிடம் போதிய பணவசதி இல்லை.

இவர்களுக்கான வருமான அதிகரிப்பையும் அதனூடாக அவர்களுடைய நம்பிக்கையையும் வளர்த்தெடுப்பதை கருத்திற்கொண்டு நாம் உற்பத்தி மற்றும் பயிற்சி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகிறோம். இவ்வாறு பயிற்சி பெறுகின்ற பெண்களுக்கும், உற்பத்தி முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பெண்களுக்கும் மாதர் சங்கங்கள் ஊடாக நிதியினை வழங்கி அவர்களது எதிர்காலத் திட்டத்தினை மேலும் விரிவாக வளம்படுத்திக்கொள்ள விரும்புகிறோம்.

இதற்காக தேவைப்படும் நிதியை எமது நிறுவனத்தால் முழுமையாக வழங்க முடியாதுள்ளது. இதனால் நாம் நிதி சேகரிப்புத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். நாம் மக்களிடமிருந்தும், தனியார் நிறுவனங்களிலிருநதும் மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்தும் கலைநிகழ்ச்சிகள் நடத்திப் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிதியினைத் திரட்டி வருகிறோம்.

எனவே, இத்திட்டத்திற்குத் தங்களின் மேலான ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றோம். ✷

# வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு கொடுப்பனவு வழங்கும் ஏற்பாடு பூர்த்தி!

புத்தளம், டிசெ.14

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் சமூகசேவை உதவிக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு - கிழகது விசேட ஆணையாளர் எம்.சீ.எம். ஜுனைத் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு ஜுலை மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையுமான ஆறுமாத காலத்துக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படுமென்றும் - கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெற்றவர்கள் கீழ்காணும் திகதிகளில் குறிப்பிட்ட இடங்களில் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

✷ இன்று 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை எருக்கலம்பிட்டி கிராமம் - பிற்பகல் 2 மணிமுதல் பிற்பகல் 4.30 மணி வரை ஹுசைனியாபுரம்.

✷ நாளை 15ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை விசேட ஆணையாளர் காரியாலயம், புத்தளம்.

✷ 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி முதல் நண்பகல் 12.30மணிவரை 'அரபாநகர்' கிராமம் - கொய்யாவாடி - பிற்பகல் 2மணிமுதல் பிற்பகல் 4.30மணிவரை 'அல்ஹம்ரா' முகாம் - பள்ளிவாசல்துறை.

✷ 17ஆம் திகதி வெள்ளி - காலை 9மணிமுதல் நண்பகல் 12 மணிவரை குசிகரும அலுவலகம் - கண்டல்குழி - பிற்பகல் 2.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை ஆர்.ஆர்.ஆர்.ஏ.காரியாலயம், கற்பிட்டி.

✷ 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை நாச்சியாதீவு முகாம் - அநுராதபுரம்.

குறிப்பிட்ட இடங்களில் கொடுப்பனவுகளைப் பெறமுடியாதவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதியன்று அவற்றை புத்தளம் விசேட ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று விசேட ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (க-10)

# நுளம்பு வலைகளுக்கு மருந்து தோய்க்கும் பணி

வலி.தென்மேற்கு,டிசெ.14

சுழிபுரம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் வீட்டுப் பாவனையிலுள்ள நுளம்பு வலைகளுக்கு 'பேமத்திரின்' மருந்து தோய்த்துக் கொடுக்கும் பணி நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பிரிவிலுள்ளவர்கள் தங்கள் பாவனையிலுள்ள நுளம்பு வலைகளை சுத்தம் செய்து, மருந்து தோய்த்துக்கொள்ளமுடியும் என்று சுழிபுரம் பொது சுகாதாரப் பரிசோதகர் வி.ர தீஸ் தெரிவித்துள்ளார். (3-135-202)

# நீங்காத நினைவலைகளுடன்...

முதலாம் ஆண்டு | 24 ஆம் ஆண்டு



அமரர்
கதிரவேலு ஐயாத்துரை
தோற்றம் 13-05-1926 மறைவு 26-11-2003
திதி: திருதியை



அமரர்
சம்பந்தர் திருமூர்த்தி
தோற்றம் 20-12-1943 மறைவு 12-12-1980

ஆலமரம் போல் எமை ஆதரித்த - ஐயாவே!
கண்ணிமைக்கும் பொழுதிலே
ஓராண்டு சென்றதையா!

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
மிளிர்ந்த எம் - தந்தையே!
எண் மூன்றாண்டுகள் சென்றதே
- அப்பா!

*பொன்னான வாழ்வுதனைப் போற்றி - வளர்த்தவர்களே!*
*பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்தவர்களே - உங்களை இழந்து*
*சிறகிழந்த பறவைகளாய் தவிக்கிறோம் - இன்று நாம்.*

*- மனைவி, மக்கள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*
(சி/39584)

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

*- மனைவி, மகன்,*
*உறவினர்கள்.*

# இசை நிகழ்வில் நடந்த கிரனேட் வீச்சு பயங்கரவாத செயல் என்கிறது இந்தியா

பிரபல ஹிந்தி நடிகர் சாருக்ஹானின் இசை நிகழ்வின்போது இடம்பெற்ற கிரனேட் தாக்குதல் ஒரு பயங்கரவாதச் செயல் என்று கூறி, இந்தியா அதனை வன்மையாகக் கண்டித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நடந்த இசை நிகழ்ச்சியை குழப்புவதற்கு பௌத்த பேரினவாதிகளும், பிக்குகளும் பெரும் முயற்சியை மேற்கொண்டிருந்தனர் எனினும், அவற்றையும் தாண்டி இந்நிகழ்வை நடத்துவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையில் மேற்படி இசைநிகழ்ச்சி இடம்பெற்ற மைதானத்தில் மேற்கொளளப்பட்ட கிரனேட் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். 12இற்கும் மேற்பட்டோர் காயமீடைந்திருந்தனர்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிகையில் இந்திய அரசு இப்பயங்கரவாதச் செயலை கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளதோடு இலங்கை அரசு இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் என்று தான் நம்புகின்றது எனவும் தெரிவித்துள்ளது. (க-3)

# இசைநிகழ்ச்சி குண்டுவெடிப்பு: சுற்றுலாத்துறைக்குப் பாதிப்பு!

கொழும்பு,டிசெ.14

கொழும்பில் கடந்த 11ஆம் திகதி இரவு இசை நிகழ்ச்சியொன்றில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவமானது, நாட்டில் வளர்ந்து வரும் சுற்றுலாத்துறைக்கு பெரியதொரு தாக்கத்தை உண்டு பண்ணக்கூடுமென்று சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்திருக்கின்றார்.

சாருக்ஹான் நடத்திய இசை நிகழ்ச்சியைக் குழப்புவதற்கு ஒரு சிலர் மேற்கொண்ட முயற்சி முழு நாட்டிற்கும் அவப்பெயரைத் தந்திருப்பதாகவும் அர்ஜுன ரணதுங்க கூறியிருககின்றார்.


இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

சாருக்ஹான் நடத்திய இசை நிகழ்ச்சியின் போது இடம்பெற்ற சம்பவம் மிகமிக துரதிர்ஷடவசமானது. சமாதான சூழ்நிலையில் மக களின் பொழுதுபோக்குக்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சி ஆரம்பிக்கமுன்னர் சாருக்ஹான், மறைந்த கங்கொடவல சோமதேரருக்காக இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினார்.

துரதிர்ஷ்டவசமாக இந்த நாட்டில் பிறந்தவர்களே இந்த வேலையை செய்திருக்கின்றனர். இந்த செயற்பாட்டின் மூலம் வளர்ந்து வரும் சுற்றுலாத்துறை மட்டுமன்றி, வெளிநாட்டின் சிறந்த கலைஞர்களின் இலங்கை வருகையும் பெரிய பாதிப்பை எதிர்நோக்கும். இந்தச் சம்பவம் நாட்டிற்கும், எமது பெயருக்கும் அவப்பெயரையே தந்துள்ளது - என்றார். (க-8)

# தமிழ் மொழிப்பற்றும் இன உணர்வும் கொண்ட 'நாட்டுப்பற்றாளர்' மூதறிஞர் சொக்கன்

## தமிழீழ விடுதலைப் புலிகள் கௌரவம்



கிளிநொச்சி,டிசெ.14

தமிழ் மொழிப்பற்றும், இனப்பற்றும், மண்பற்றும் கொண்ட சொக்கனின் அரும்பணியை நினைவில் நிறுத்தி, அவரை 'நாட்டுப்பற்றாளராக' தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அரசியல்துறை நடுவப்பணியகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுளளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மூதறிஞர் சொக்கனின் மறைவுச் செய்தி ஈழத்தமிழ் மக்களை பேரதிர்ச்சியிலும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்மொழி, இன,சமுதாய மேன்மையை இலக்காகக் கொண்ட நூற்றுக்கணக்கான இலக்கியங்களைப் படைத்து தமிழ் இலக்கிய உலகில் பெரும் புகழ்பெற்று விளங்கியவர் மூதறிஞர் சொக்கன்.

தமிழ் மொழிப்பற்றும் இனப்பற்றும், மண்பற்றும் கொண்ட மூதறிஞர் சொக்கன் - ஆசிரியராக, பள்ளிமுதல்வராக, விரிவுரையாளராக சிறப்புறக் கல்விப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்பும் தமிழ்ப் பணியில் ஓய்வின்றி உழைத்தவர்.

தமிழ் மொழியை உயிரிலும் மேலாக எண்ணிச் செயற்பட்ட அவர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தமிழீழக் கல்விக்கழகம், தமிழ் வளர்ச்சிக்கழகம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, கலை-பண்பாட்டுக் கழகம் ஆகியவற்றோடு இணைந்து முதுமைக் காலத் திலும் தமிழ்மொழிக்கும், தமிழினத் திற்கும் அளப்பரிய பணியாற்றியவர்.

அவர் படைத்த கதை, கவிதை, நாடகம், நாவல் என்பன தமிழ் மக்களிடையே நாட்டுப் பற்றையும் இனப்பற்றையும் வளர்த்தன. அவர் படைத்த வரலாற்றுக் கட்டுரைகள், மாணவர்களுக்கான இலக்கண, இலக்கிய நூல்கள் யாவும் மாணவர்களை மொழி, இன, நாட்டுப் பற்றுள்ளவர்களாக்கி விடுதலைப் போரின்பால் அவர்களை ஈர்க்கும் வகையில் அமைந்தன.

அவரது படைப்புக்களுக்காக பல்வேறு நிறுவனங்களினதும், அமைப்புக்களினதும் பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்ற போதும் அடக்கமாகவும், அமைதியாகவும் இருந்து தமிழ்ப்பணியாற்றிவந்தார்.

நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும், அவற்றைப் பொருட்படுத்தாது அரும் பணியாற்றி வந்த அன்னாரின் திடீர் மறைவு எமக்குப் பேரதிர்ச்சியையும், துயரத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. நாட்டுப்பற்றோடு ஆவர் ஆற்றிய அரும்பணியை நினைவில் நிறுத்தி அன்னாரை நாட்டுப்பற்றாளராக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவிப்பதுடன், அவருக்கு இறுதி வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

அன்னாரின் பிரிவில் துடித்து நிற்கும் அவரது பிள்ளைகள், உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-204)

# தமிழ் கூறும் நல்லுலகை சொக்கவைத்த சொக்கனின் மறைவு எமக்குப் பேரிழப்பு

## ஈழவேந்தன் எம்.பி.இரங்கல்

தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"மூன்றுகால் நூற்றாண்டு வாழ்ந்து இரண்டு கால் நூற்றாண்டுக்கு மேல் தன்பேச்சாலும் எழுத்தாலும் தமிழ் கூறும் நல்லுலகை சொக்கவைத்த சொக்கனின் மறைவு எம்மை ஆற்றொணாத் துயரில் ஆழ்த்துகின்றது.

பிறப்புண்டேல் இறப்புண்டு என்பது எம் எல்லோருக்கும் தெரிந்ததே. இன்றிருந்தோர் நாளையில்லை என்ற பெருமையுடைத்து இவ்வுலகு என்ற வள்ளுவர் வாய்மொழியையும் நாம் மறுப்பதற்கில்லை. எனினும், எம்மோடு நெருங்கிப் பழகி, நிலைத்த பணியாற்றிய பெருமக்களை நாம் மறக்க நினைத்தாலும் மறக்க முடியாது. அத்தகைய ஒருவர்தான் நமது சொக்கன்.

மிக இளமையில் தமிழ் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்து தம் இறுதி மூச்சு வரை தமிழ் இலக்கிய உலகோடு இணைந்து செயற்பட்டவர் சொக்கன். அவரின் மூன்று கால் நூற்றாண்டு வாழ்வில் தமிழைப்பற்றியோ, தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ எண்ணாது, அவர் விலகி வாழ்ந்ததாக நாம் கூற முடியாது. தமிழ்,இலக்கியம் பற்றியும் அவர் கடைப்பிடித்த சைவ சித்தாந்தக் கோட்பாடு பற்றியும் அவருடன பேசுவது எமக்குத் தனி இன்பத்தைத் தரும்.

சில மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மெய்யியல் பயிலும் ஒரு மாணவியை அழைத்துச்சென்று சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார், சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை எந்த அடிப்படையில் பார்க்கின்றார் என்பதை அழைத்துச்சென்ற மாணவியின் ஆய்விற்காக சில கருத்துக்களைக் கேட்டபொழுது, கடல் மடை திறந்தது போல் கருத்துக்களை வழங்கியதோடு, எம்மை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் பல் விளக்கங்களையும் வழங்கினார். மாணவியை அழைத்துச் சென்ற நான், நானே அவரின் மாணவனாக மாறி அவர் கருத்துக்களில் ஊறித் திளைத்தேன்.

அவர் படிக்காத தமிழ் இலக்கியங்கள் இல்லை. இலக்கியங்களை ஒப்புநோக்கி எவரையும் புண்படுத்தாது பண்படுத்தும் முறையில் அமைதியாக அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் எம் சிந்தனைக்கு நல்விருந்து.

ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கும் திருவாசகத்துக்கு தன் உள்ளத்தை பறிகொடுத்தவர் நம் சொக்கன் அவர்கள். திருவாசகத்துக்கு உருக்கும் தன்மை உண்டு என்பதை யாம் அறிவோம். ஆனால், நாம் அவரின் உரையை செவிமடுக்கின்ற போது எம்மை மீறி எம் கண்கள் கலங்கும். எம் உள்ளமோ உருகி ஏதோ ஒரு தனியுலகில் எமை வாழ வைக்கும். சில காலங்களுக்கு முன்பு அவர் தமிழகம் வந்திருந்தபோது மயிலாப்பூரில் உள்ள சைவசித்தாந்த பெருமன்றத்தில் உரை நிகழ்த்துவதற்காக அவரை அழைத்துச் சென்றேன். அவர் திருவாசகத்தில் ஓர் அங்க மாக விளங்கும் சிவபுராணத்திலுள்ள 72ஆவது வரியாகிய

*"சோதியனே துன் இருளே*
*தோன்றா பெருமையனே"* என்ற சொற்றொடரை வைத்து ஒரு மணிநேரம் அவர் உரை நிகழ்த்தினார். இறைவன் சோதியாகவும் துன்னிருளாகவும் விளங்குகின்றார் என்பதற்கு அவர் அளித்த விளக்கம் அவையோரை வியப்பில் ஆழ்த்தியது. இறைவன் எப்படி ஒரே நேரத்தில் ஒளியாகவும், இருளாகவும் விளங்குகின்றார் என்பதற்கு அவரைப் போல் வேறொருவர் விளக்கம் கொடுக்க முடியுமோ என்பது பெருங் கேள்வி.

"ஈழத்து அறிஞர்களிலே நல்ல நகர் ஆறுமுகநாவலரிடத்தில் அவருக்கு தனி ஈடுபாடு என்பது நாடு அறியும். அடுத்து சேர் பொன். இராமநாதன் இவர் இதயத்தை ஈர்த்தவராக விளங்கியுள்ளார். இவர்களைப் பற்றி இவர் எழுதிய நூல்கள் சான்றுகூறும்.

தமிழ் புலவர்கள், வித்துவான்கள, பண்டிதர்கள் பலர் தமிழ் இலக்கியத்திலோ, சிவநெறியிலோ மூழ்கித் திளைத்தநிலையில் தமிழர்களை எதிர் நோக்குகின்ற அரசியல் அழிவு பற்றியோ, சமுதாய சிக்கலைப் பற்றியோ, கல்வித் துறையில் எம் சமுதாயம் மிகக் கீழ் நோக்கிச் சென்றுள்ளது பற்றியோ அக்கறை கொள்ளாது ஒதுங்கி வாழும் இயல்பு படைத்தவர் பலர். இவரோ காலத்தின் கருத்தோட்ட வளர்ச்சிக்கு ஏற்ப தமிழர்கள் எதிர்நோக்குகின்ற அனைத்து சிக்கல்களையும் மாற்றி அமைக்க வேண்டும் என்ற சிந்தனை உடையவர். ஆனால், மருந்தளவும் விளம்பரத்தை விரும்பாது அமைதியாக பணியாற்றியவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பண்பாட்டு பிரிவை நடத்தும் கவிஞர் புதுவை இரத்தினதுரையோடும் தமிழீழ கல்விக் கழகத்தை நடத்தும் இளங்குமரனுடனும் தமிழ் உணர்வில் ஊறித் திளைத்து தொண்டாற்றும் தமி ழேந்தி அவர்களுடனும் அவர் தொடர்பு கொண்டு நிலைத்த பணி ஆற்றியுள்ளதையும் வரலாறு வரைந்தே தீரும்.

சுருங்கக் கூறின் தமிழ் இலக்கிய உலகில் அரைநூற்றாண்டு ஆட்சி செய்த பெருமகன் காட்சிக்கெளியனாய், கடும்சொல அற்றவனாய், பண்பாட்டின் திருவுருவமாய் விளங்கி அவர் செய்த அமைதிப் புரட்சியை (Silent Revlution) ஒட்டி வரலாற்று ஆசிரியர்களும் இலக்கிய திறனாய்வாளர்களும் வழங்கப் போகின்ற நல்ல தீர்ப்பை நடுநிலையாளர்கள் ஏற்றேயாவர்.

அவர் பெற்ற பிள்ளைகள் பெருமைக்குரியவர்கள். அவரின் மகள் வாசுகி, சங்க இலக்கியம் சாற்றும் மருதத்திணையின் மாண்பினை உணர்ந்து வரைந்துள்ள நூல் எம் சொக்கன் அவர்கள் நூல்களை மட்டும் எமக்கு தந்து போகாது நாம் பெருமைப்படத்தக்க வாசுகி என்ற வழித்தோன்றலையும் தந்து போயிருப்பது



ஆறுதலளிக்கும் நிகழ்ச்சியாகும்.

இவை அனைத்தையும் நினைவு கொணடு தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் -இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காது வாழும் எம் தலைவர் - பிரபாகரன், மறைந்த நம் தமிழ் பெருந்தகைக்கு "நாட்டுப்பற்றாளர்" என்ற பொருள் பொதிந்த பட்டத்தினை வழங்கி அவரின் பெருமையை உலகறியச் செய்துள்ளார் என்றுள்ளது.(8)

# கல்விப் புலத்திற்கு பேரிழப்பு

கல்வீப் புலத்தில் ஆசிரியராய், அதிபராய், விரிவுரையாளராய், பாடநூல் எழுத்தாளராய், நாடக ஆசிரியராய் பிற்காலத்தில் சிறந்த ஆலோசகராய் மிளிர்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் பெருந்தொண்டாற்றிய சொக்கன் ஐயாவின் மறைவு கல்விப்புலத்திற்குப் பேரிழப்பாகும் என அன்னாரின் மறைவையொட்டி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டிருக்கும் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

பார்ப்பதற்கு குறுமுனியாய் தூயவெள்ளாடையுடன் அமைதியாக மூன்று சகாப்தங்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும், தமிழ் மாணவர் சமூகத்திற்கும் அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. அவர் இறக்கும்வரை தமிழே தனது மூச்சு என்றும் சேவையே தனது வாழ்க்கை என்றும் வருங்கால சமூகத்திற்கு இடித்துரைத்த மாமனிதர்.

அவர் படைத்த பல ஆக்கங்கள், பல பாட நூலகளில் இருக்கின்றது; வருங்காலத்திலும் இருக்கும். இந்தநிலை அவரின். எழுத்துருவாக்கங்களுக்கும் அவரது சீரிய தமிழ்ப் பணிக்கும் கிடைத்த பெரும்கௌரவ மாகும். தமிழ்மொழியின் மீது இருந்த பற்றும் அதனை ஐயந்திரிபுரக் கற்றறிந்ததன் பயனாகவும் பொதுமேடைகளில் தமிழ்மொழியில் மாணவர்களிடையே குறைந்து வரும் அக்கறையையும் தமிழ்மொழியைப் பல் வேறு வழிகளில் சிலர் பிழையாக கையாளும் நிலையையும் தமிழ் மொழிக்காக உருவாக் கப்பட்ட பல அமைப்புக்களில் பிரதானமான பதவிகளில் இருந்து இறுதிமூச்சுள்ளவரை துணிவோடு உரத்த குரலில் முழக்கமிட்ட பெரியதொரு விருட்சம் சரிந்துவிட்டதென இ.த.ஆ.சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவமும், சி.து. பொ. செயலாளர் த.பஞ்சலிங்கமும் கூட்டாக விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

# குடும்பத்துக்கு ஆற்றிய தொண்டுகளைவிட தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளே அதிகம்

## பரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.14

புகழ்பூத்த தமிழறிஞர் அமரர் சொக்கன் அவர்கள் தன்குடும்பத்துக்கு ஆற்றிய தொண்டுகளைக் காட்டிலும் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளே அதிகம் என்று கூறினால் அது மிகையல்ல.

தமிழறிஞர் சொக்கனின் மறைவு குறித்துப் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் அதன் செயலாளர் செ.மெற்றாஸ் மயில் வெளியிட்டுள்ள அஞ்சலிச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

முத்தமிழையும் முறையாகக் கற்று அவற்றை முறையாக முன்னெடுத்து முதுகல்வியை மாணவர்களுக்குக் கொடுத்த ஆசான். ஆசிரியர்களுக்கு ஆசிரியராகப் பேராசிரியராக தூய தமிழை இலக்கண முறையுடன் பரப்பிய பேராசான. அறிஞர்களுக்கு அறிஞராக ஆராய்ச்சி செய்து ஆலோசனைகள் வழங்கிய மூதறிஞர். கல்விமான்களுக்குக் கனத்த அறிவுரை வழங்கிய கலாநிதி.

கதைகள், நாடகங்கள், கட்டுரைகள், இலக்கண நூல்கள், தமிழ் நூல்கள் மற்றும் இந்து சமய நூல்கள் என்பன அவர் விட்டுச்சென்ற தமிழ்ச் சொத்துக்கள், நாடகக் கலைக்கு அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது. மண்மீது கொண்ட பற்றினால் மண்ணின் நிகழ்வுகளைத் தனது கட்டுரைகளாக வடித்தவர். என்றுள்ளது. (10)

# சைவத்தையும் தமிழையும் பேணிக்காத்தவர் சொக்கன்

யாழ்ப்பாணத்தில் வைசமும் தமிழும் வளர்த்த நாவலரின் வழியைப் பின்பற்றி நாட்டுப்பற்றுடன் சைவத்தையும் தமிழையும் பேணிக்காத்து வளர்த்து வந்த அறிவுசால் மக்களால் போற்றப்பட்டு வந்த அறிவுச்சுடர் கலாநிதி சொக்கன் ஆற்றிய சேவையை நாம் மறக்கமுடியாது; அவர் செய்த புண்ணியமும் சேவையும் மறைக்க முடியாதவை. அவர் இறக்கும்வரை மக்களோடு மக்களாகச் சேர்ந்து செயற்பட்டு சிவபதமடைந்துள்ளார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அவரைப் பொறுத்தவரையில் சாதி, சமய, கட்சி பேதமற்ற முறையில் அவரின் சேவையை மறக்காமல் நினைவு கூருவார்கள் என்பதற்கு எவ்வித ஐயமுமில்லை. அவரது இழப்பு தமிழத் தேசிய இனத்திற்கும் பேரிழப்பாகும். நாம் அவருக்குச் செய்யும் பணி அவர் வழியில் நாட்டுப் பற்றுடையவராக செயற்பட வேண்டுமென்பதே.

அவரது பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவித்துக்கொள்ளுகிறேன் - என்றுள்ளது.(8)

## புற்றுநோய் வைத்தியசாலை குறித்து ஆராயக் கூட்டம்

தெல்லிப்பழையில் இயங்கவுள்ள புற்றுநோய் வைத்தியசாலை தொடர்பான நடவடிக்கைக் குழுவின் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்குத் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.இரத்தினாயகா, புற்றுநோய் வைத்திய நிபுணர் எஸ்.வத்தேகம மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொள்வர்.(3-51)

மகிழ்ச்சிகரமான நிறைவான மக்கள் சேவையில்

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவு நகர்

**CO-OP CITY**

**மங்களகரமான ஆரம்பம்**

2004-12-14

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி

இது உங்கள் நிறுவனம்! மக்கள் நிறுவனம்! உங்கள் வரவும், உங்கள் ஆதரவும் எம்மை மகிழ்விக்கும். உங்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

*உங்கள் தேவை - எங்கள் சேவை*

*குறைந்த விலையில் தரம் நிறைந்த பொருள்கள்*

127, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

**மாறிவரும் சிந்தனைக்கு ஏற்ப கூட்டுறவின் நவீன சேவைகள்**

யாழ்.குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பர்த்தி செய்யும் பணியில்....

சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள், இறைச்சி வகைகள், புதுவகையான ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள், பழவகைகள், பழரசங்கள், ஆங்கில மருந்து வகைகள், அன்பளிப்பு, அழகுசாதன வாசனைப் பொருள்கள், பாடசாலைப் பொருள்கள், எழுதுகருவிகள், சிறுவர், சிறுமியர்களுக்கான அன்பளிப்புப் பொருள்கள்.

இவை மட்டுமன்றி

ஊரக வைப்பகம், மருந்தகம், முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட பதிப்பகம் (ஓவ்(F)செற்), தொலைத்தொடர்பகம் (பக்ஸ், போட்டோப் பிரதி, றோணியோ, அட்டையிடுதல்), சுத்தம், சுகாதாரம் நிறைந்த உணவகம், கூட்டுறவின் உள்ளூர் உற்பத்திகளின் காட்சியறையும், விற்பனையும். இவை அனைத்தையும் ஒரே மாளிகையில், ஒரே இடத்தில் குளிருட்டப்பட்ட கணனிமய சேவையினூடாகப் பெற்றுக்கொள்ளலாம். (சி-39521)(26-11-19)

### கொழும்பு குண்டுவெடிப்பு சம்பவம்:

# காயமடைந்த பன்னிருவரில் நால்வரின் நிலை கவலைக்கிடம்

கொழும்பு.டிசெ.14

கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவு பிரபல நடிகர் ஷாருக்கான் நடத்திய இசை நிகழ்ச்சியின்போது இடம்பெற்ற கைக்குண்டுவீச்சுச் சம்பவத்தில் படுகாயமடைந்த 12 பேரில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்தவர்களில் இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் ரவி சாஸ்திரியின் மனைவியும் அடங்குகிறார். இவர் கொழும்பிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.


காயமடைந்தவர்களில் நான்குபேர் அவசர விபத்துப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும். அவர்களின் நிலைமை மோசமாக இருக்கின்றது எனவும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார். காயமடைந்த 12பேரும் ஓரிரு வாரங்களுக்கு வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிவருமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

காயமடைந்தவர்கள் பலரிடம் கறுவாத்தோட்டப் பொலீஸார் நேற்றுமுன்தினம் வாக்குமூலங்களைப் பதிவு செய்திருக்கின்றனர். இதற்கிடையில், சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் அர்ஜுன ரணதுங்க, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா ஆகியோர் வைத்தியசாலைக்குச் சென்று காயமடைந்தவர்களைப் பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை, தமது நிறுவனத்தின் புகைப்படப்பிடிப்பாளர் ஒருவரைப் பலிகொண்ட இந்த சம்பவத்தினை வன்மையாகக் கண்டிப்பதாக லங்காதீப பத்திரிகையின் ஆசிரியர் சிறி ரணசிங்க தெரிவித்திருக்கிறார். (க-10)

**ஈர விழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி**

மண்ணுலகு
1932 - 11 - 22



விண்ணுலகு
2003 - 11 - 26

**அமரர் தம்பிஐயா பொன்னம்பலம்**

(இளைப்பாறிய எழுதுவினைஞர், சுகாதாரத் திணைக்களம்)

திதி: 14-12-2004

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த்
திகழ்ந்த அன்புத் தெய்வமே!
நீங்கள் அணைந்து முருகனுடன் இணைந்து
ஆண்டு ஒன்றானாலும் உங்கள்
நினைவு அலைகள் எம்மைவிட்டுப்
பிரியாது ஐயா....!

இல.14, கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(39535)(26-11-19)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**பார்போற்ற வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

திருநெல்வேலி ஞானக்குழந்தை கல்விக் கழகத்தில் ஆசிரியர் மூ.வே.அன்பழகன் அவர்களிடம் கல்வி பயின்று
தரம் 5இல் 2004 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவ, மாணவிகள்

01. க.துவாரகன்
02. ந.லவலோஜன்
03. மு.விதுன்
04. வ.சந்தன
05. கா.சௌமி
06. ச.சஜீவன்
07. ப.தர்மிளா
08. சு.சுபஸ்திகா
09. ச.நிவேதிகா
10. ந.செந்தூரன்
11. ஸ்ரீ.அச்சுதை
12. தி.கிருஷா
13. ந.விதுஷன்
14. வி.பைரவி
15. ம.றொசாந்தன்
16. சி.சிவானுஜன்
17. ஆ.வாகீசன்
18. வி.தினேஸ்
19. சு.றொசானி
20. யோ.தக்ஷாயினி
21. தி.சிவஜீவன்
22. சி.மேகலாதன்
23. ஜெ.ஜானகி
24. த.பூங்குழலி
25. ஜெ.கிசோபன்
26. சி.மிதுலா
27. க.மதுரா
28. க.யதுசன்
29. உ.கேதுசன்
30. கெ.தஜீவன்
31. ரகுசரவணன்
32. சுகுமார் சுபஸ்திகா
33. க.சரவணன்
34. எமில்
35. ம.நிரோஷன்
36. பூ.டர்வின்
37. பு.றாக்சிகா
38. ஞா.கஜகர்னி
39. த.மோகனப்பிரியன்
40. கு.திலக்ஷன்
41. தி.கிருஷாந்
42. சி.சியாமளஜெனனி
43. த.பிரியலக்ஷன்
44. கு.சிற்பரன்
45. ர.ரவிக்குமார்
46. ஆன்.அபிநயா
47. சொ.துளசிகன்
48. பு.ரஸ்மி
49. தி.விக்னேஸ்வரன்
50. பா.ஜெனிவர்
51. ஜெ.ஜனரூபன்
52. ச.சஜீவன்
53. ப.வைத்தீஸ்வரசர்மா
54. செ.மயூரி
55. T.பேனாட் ரிஷாந்
56. S.கார்த்திகாயினி
57. ந.சமந்திகா
58. வி.கஜானந்தா
59. சி.சதுர்ஷன்
60. க.குருபரன்
61. தி.தவலக்ஷன்
62. ஆ.தமியா
63. த.தனுஸ்யந்தி
64. க.லக்ஷயன்
65. இ.பிரியதாரணி
66. சி.ரங்கத்பின்
67. அ.வித்தாகரன்
68. சி.நிவேதிகா
69. கு.சஜீவன்
70. இ.செங்கோடன்
71. ம.கிருஸ்ணி
72. பா.கஜானா
73. கு.தேனுஜா
74. ப.நேர்த்திகா
75. சி.அபிராமி
76. சு.கானப்பிரியா
77. சி.துஷாந்
78. ஜெ.ஜனுஷன்
79. இ.ஜெயரூபினி
80. சி.விஜிதரன்
81. தி.கோஜிகா
82. நிரோஜன் யூட்
83. P.கபில்ராஜ்.
84. ஜெ.டிலான்
85. உ.ரிசிகேசினி
86. யோ.தேனுகா
87. சி.திலக்ஷன்
88. சி.கோபிநாத்
89. ஜெ.சயந்தன்
90. க.தயானா
91. த.சாம்நிரோஜன்
92. க.சஜீவன்
93. க.திலக்ஷி
94. சி.மயூரா
95. இ.லக்சிகா
96. ச.காருண்யா
97. கா.புஸ்பகாந்தன்
98. க.நிசாந்தினி
99. க.விதுஷன்
100. ஸ்ரீ.இனோஷா
101. தி.மயூரசாகித்தியன்
102. நி.கோபி
103. சி.தர்ஷன்
104. சி.திலானி
105. யோ.ஸ்றெபானா
106. ஆ.கஜனி
107. பே.நிரோசன்
108. பா.தர்சன்
109. மோ.திவாகரன்
110. ஆ.கஜேந்திரன்
111. ம.கிரிஜன்
112. ம.தீமிழினி
113. ர.துளசிகா
114. க.மாதங்கி
115. சி.வினோஜிகா
116. சி.துளசிகா
117. ப.பவித்திரா
118. ந.சாருஜா
119. ச.துஷாரகா
120. த.சோபிதா
121. ஜெ..அபிநயா
122. ர.வித்தியபிரதா
123. வே.வரஜீவி
124. பா.லிசி
125. S.மயூரன்
126. ஆ.துளசிகா
127. ஜெ.திவாகர்
128. பு.பிரியங்கா
129. அ.ஆராஅமுதன்
130. சி.திவியன்
131. இ.பார்த்தீபன்
132. பு.லதுஷா
133. ம.கார்த்திகா
134. சி.சிவறாஜி
135. ம.விந்தாரகன்
136. ப.மாதுமை
137. ப.ஆதிரை
138. ர.செந்தூரன்
139. ம.பரசுராம்
140. தி.பிரகாஸ்
141. சி.குருபரன்
142. சு.சிவதர்சன்
143. அ.பிறிம்ஸி
144. ஜெ.கஜானன்
145. ர.கஜிந்
146. ப.தீபிகா
147. ந.அபிசாந்
148. வா.லக்சிதா
149. வ.லக்சனா
150. வி.கஜானன்
151. சி.சிறிவிந்துஜன்
152. த.அருந்தஷா
153. ம.தர்மிக்கா
154. ந.கௌசளா
155. சு.திபாகன்
156. க.விதுசிகா
157. ஜெ.கஸ்தூரி
158. யோ.கிருஷானிக்கா
159. பா.கோஜப்பிரியன்
160. சு.தனுசியன்
161. வ.வவிசன்
162. க.கர்ஜிகா
163. சு.சதுர்ணதேவி

*மேலும் இவர்களுடன் சித்தியெய்திய மாணவர்களையும் வெட்டுப்புள்ளிகளை அண்மித்தவர்களையும் இன்றைய பரிசளிப்பு நன்னாளில், எதிர்காலத்தில் கல்வியில் உயர்நிலை பெற்றுச் சமூகத்தில் உயர்தகைமையாளர்களாக விளங்க வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*இயக்குநர், ஆசிரியர்கள்.*

**ஞானக்குழந்தை கல்விக் கழகம்**, 10, சிவன் வீதி, திருநெல்வேலி.

(39594)(42-11-19-26)

# பணம் கொடுத்து வாங்காமல் எளிதாகக் கிடைக்கும் மரக்கறி வகைகள்

**கமமும் புலமும்**
**தயாரிப்பு: ஜெயஸ்ரீ**

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆவணி மாதம் தொடக்கம் மார்கழி மாதம்வரையான காலப் பகுதி பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சிக் காலமாகும். மழைவீழ்ச்சி அதிகரித்த இக்காலத்தில் பெரும்பாலான வயல் நிலங்களில் எல்லாம் பெரும்போகத்துக்கான நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மழைகாலத்தில் தோட்ட நிலங்களில் மரக்கறிச் செய்கையும் குறைவாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் இக்காலங்களில் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடும், கிடைக்கும் மரக்கறிகளின் விலை உச்ச நிலையிலும் காணப்படுகின்றன.

சாதாரண தரகுடும்பங்கள் மாரிகாலத்தில் மரக்கறித் தட்டுப்பாட்டால் பெரிதும் கஷ்டப்படுகின்றன. ஆனால், மனிதனுடைய எந்த முயற்சியுமின்றி இயற்கையாகவே இக்காலத்தில் வளரும் சில மரக்கறிகளைப் பற்றி மக்கள் எவரும் பொருட்படுத்துவதில்லை.

காடுகள், பற்றைகள் போன்ற இடங்களில் வளரும் இயற்கைத் தாவரங்களும் அவற்றின் இலைகள், காய்கள் என்பனவும் பல மருத்துவ குணங்களைக் கொண்டிருப்பதுடன் மாரிகாலத்தில் மரக்கறித்தட்டுப்பாட்டுக் குறைபாட்டை நீக்கிப் பொருளாதாரச் செலவையும் குறைக்கப் பயன்படுகின்றன.

செடி வகைகளில் முசுட்டை, கொவ்வை, மொசு மொசுக்கை, முடக்கத்தான், கங்குங் போன்றவற்றின் இலைகள் வறையாக வறுத்து அல்லது பச்சடி செய்து சாப்பிடக்கூடியன. மூலிகை வர்க்கங்களான இவற்றில் இருந்து எமது உடலுககு வேண்டிய பல்வேறு வகைப்பட்ட சத்துக்களும் கிடைக்கின்றன.

அதேபோல், வேலிகள் மற்றும் மரங்கள் போன்றவற்றில் வளரும் கொடி ஆலங்காய் அல் லது கராம்பு அவரைக்காய், தும்பங்காய் போன்றவை மாரிகால மரக்கறித் தேவைகளை இலகுவாகப் பூர்த்திசெய்யவல்லன.

இயற்கையாக வளரும் இப்பயிர்களை வீட்டுத்தோட்டங்களில் பயிர் செய்வதால் அவற்றின் உற்பத்தியை மேலும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

### கொடி ஆலங்காய் அல்லது கராம்பு அவரை

பெரும்பாலும் கொடி ஆலங்காய் வரண்ட வலயங்களிலேயே அதிகமாக வளர்கின்றது. இதனை கராம்பு அவரை அல்லது கராம்பு கத்தரி எனவும் அழைக்கின்றார்கள். இயற்கையாக வளரும் இச்செடியினை இன்று பலர் வீட்டுத் தோட்டங்களில் செய்கைபண்ணிப் பயனடைந்து வருகின்றனர். சந்தைகளில் கூட இதற்கு நல்ல கிராக்கி இருக்கின்றது. ஒருகிலோ கராம்பு ஆலங்காய் இன்று சந்தைகளில் 80 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை விலை போகின்றது.

இக்காயின் தோற்ற அமைப்பு கராம்பு போன்று காணப்படுவதால் கராம்பு அவரை அல்லது கராம்புக் கத்தரி என அழைக்கப்படுகின்றது. காய்களில் பால் வடியும் தன்மை இருப்பதனாலும் கொடிகளில் படர்ந்து காய்ப்பதனாலும் கொடி ஆலங்காய் என்ற பெயரும் இதற்குண்டு.

சைவ உணவு உண்பவர்கள இக்காயினை மிகவும் பிரியத்தோடு சந்தைகளில் வாங்கிச் செல்வதை அவதானிக்கமுடிகிறது.

இக்காயின் முற்பகுதியில் காணப்படும் உருண்டைவடிவான விதையை நீக்கிவிட்டு, எண்ணெய்யில் வதக்கிக் குழம்பு அல்லது வெள்ளைக்கறி சமைத்தால் வெகு சுவையாக இருக்கும்.

சைவ உணவு உட்கொள்வோர் மட்டுமல்ல, மாமிச உணவு உட்கொள்வோர் கூட இதனைப் பயன்படுத்தலாம். இவற்றுடன் இறால், மாசிக்கருவாடு போன்றவற்றைச் சேர்த்துச் சமைத்தால் இன்னும் சுவையாக இருக்கும்

### நருகை செய்தல்

புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் பெய்யும் மழையுடன் பெரும்பாலும் இயற்கையாகவே பற்றைகளில் அல்லது மரங்களில் படர்ந்து வளர்கின்றது கொடி ஆலங்காய் செடி.

வீட்டுத்தோட்டங்களில் இதனை நட்டுப் பயிர் செய்வதனால் தோட்டத்து வேலிகளைச் சுற்றி 4-5 அடி இடைவெளிவிட்டு ஒவ்வொரு குழியிலும் இவ்விரண்டு விதைகளை நடலாம். இவற்றைப் பந்தல் இட்டு பரந்த அளவில் செய்வதானால் ஒவ்வொரு கொடிக்கும் இடையே 5 அடியும், நிலைகளுக்கிடையே மூன்று அடியும் இடைவெளிவிட்டு நடலாம். பாகற்செடிக்கு இருக்கின்ற பந்தலைப்போல இச்செடிக்கும் பந்தல் போட்டுப்படரவிடலாம்.

கொடியானது முளைத்துப் படர்ந்து சுமார் மூன்று நான்கு மாதங்களுக்குத் தொடர்ந்து காய்த்துக்கொண்டே இருக்கும். நன்றாக இதனைப் பராமரித்து வந்தால் இன்னும் நீண்ட காலத்துக்குப் பயன்பெறமுடியும்.

ஒவ்வொரு கொடியில் இருந்தும் சுமார் ஐந்து முதல் எட்டுக்கிலோ வரையிலான காய்களை இக்காலத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

கொடிகளைக் கவனிக்காதுவிட்டால் அவை 10-20 அடிகள்வரை வளரும். கொடிகளின் வளர்த்தியை சீர்செய்து கட்டுப்படுத்திப்படர விடவேண்டும். மழை குறைந்த காலங்களில் கொடிகளுக்கு நீர் ஊற்றிப் பராமரிக்கவேண்டும். காய்களை அதிகம் முற்றவிடாமல் பிஞ்சிலேயே பறித்துக்கொள்ள வேண்டும். காய் அதிகம் முற்றினால் சமையலுக்கு உதவாது.

### தும்பங்காய்

கொடி ஆலங்காய் போன்றே தும்பங்காயும் இயற்கையாகப் பற்றைகள், காடுகள் நிறைந்த இடங்களில் வளர்கின்றது. இதன் காய்கள் உருண்டைவடிவத்திலும், முட்டை வடிவத்திலும் காணப்படும். காய்களின் மேற்பகுதி பச்சை நிறமாகவும் முள் போன்ற அமைப்பையும் கொண்டிருக்கும். இலைகளும் இலை நரம்புகளும் புடோல் இலைகளை ஒத்திருக்கும். சந்தையில் தும்பங்காய்களுக்கும் நல்ல வரவேற்பிருக்கின்றது.

இதுவும் ஐப்பசி மாதத்தில் பெய்யும் மழையுடன் முளைத்துக் கார்த்திகை மாதத்தில் காய்க்கத்தொடங்குகின்றது. தொடர்ந்து நான்கு மாதங்கள் வரை இதன் காய்களை அறுவடை செய்யலாம்.

தும்பங்கன்றுகள் விதைகள் மூலமாகவும் கிழங்குகள் மூலமாகவும் இனவிருத்தி செய்கின்றன. கிழங்கு மூலம் உண்டாகும் கொடி அதிக வீரியம் கொண்டதாகவும், அதிகளவு காய்களைத்தரக் கூடியதாகவும் இருக்கும்.

மாசி மாதம் தொடக்கம் இக்கொடிகள் காய்ந்து மடிகின்றன. அப்போது கொடியின் அடிப்பாகத்தைத் தோண்டிக் கிழங்குகளை சேகரித்து நடலாம். கிழங்குகள் அடுத்த ஐப்பசி மாதம்வரை மண்ணுள் உறங்கு நிலையில் இருக்கும். பின் உரிய பருவகாலத்தில் முளைக்கும்.

இதில் வாழைத்தும்பை, உருண்டைத்தும்பை என இரண்டு இனங்கள் உண்டு. காயின் உருவத்தை மையமாக வைத்து இவை இனங் காணப்படுகின்றன.

ஒரு கொடியில் இருந்து 5 தொடக்கம் 8கிலோவரை காய்களைப்பறிக்கலாம். வீட்டுத் தோட்டங்களில் இவற்றை வளர்ப்பதாயின் 4அடி நிரையிலும் 4அடி கொடிகளுக்கு இடையிலும் இடம் விட்டு நடவேண்டும். இது ஒரு படர் கொடியாக இருப்பதால் பாகற்கொடிப் பந்தல் போல பந்தல் இட்டு வளர்க்கலாம். காய்கள் முற்றிப்பழுக்குமுன் பறித்துப் பயன்படுத்த வேண்டும். காய்களின் நடுவில் காணப்படும் குடல் விதைகளை அகற்றிவிட்டு எண்ணெய்யில் வதக்கிக் குழம்பாக அல்லது கறிசமைத்து உண்ணலாம். வதக்காமலும் சமைக்கலாம்.

கொடி ஆலங்காய், தும்பங்காய் போன்றவற்றுக்கு அநேகமாக நோய்த்தாககங்கள் ஏற்படுவதில்லை. இலைகளை உண்ணும் ஒரு வகைப் புழுக்களால் மட்டும் இலைகள் பாதிப்படையலாம்.

### நிறைமுனைவன்

எனவே, பராமரிப்புச் செலவின்றி, நோய்த் தாக்கம் இன்றி, இயற்கையாக வளரும் இவற்றைச் சமைத்து உண்பதன் மூலம் சுகதேகிகளாகவும், பொருளாதாரச் சிக்கனத்துடனும் வாழச் சகலரும் முயற்சிப்பது பயனுள்ளதாக அமையும்.

★

## மக்கள் பட்டினியால் துன்பப்படுகையில்
# ஜனாதிபதியின் 10 ஆண்டு ஆட்சி நிறைவுக்கு மக்களின் பணம் வீண் விரயமாக்கப்படுகிறது
## ஐ.தே.கட்சி எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.14

விலைவாசி உயர்வினால் நாட்டு மக்கள் பட்டினியால் துடிக்கும் வேளையில் ஜனாதிபதி மக்களின் பணத்தில் பல கோடிரூபாவை விரயம் செய்து தனது பத்தாவது ஆண்டு ஆட்சி நிறைவை மாவட்டங்கள் தோறும் கொண்டாடிவருகின்றார்.

இதுதான் சந்திரிகா அம்மையாரது அரசின் வறுமை ஒழிப்புத்திட்டம் என விமர்சிக்கின்றார் ஐ.தே.க. கொழும்பு மாவட்ட எம்.பி பந்துல குணவர்தன.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

சர்வதேச மட்டத்தில் சர்ச்சையை ஏற்படுத்திய கங்கொடவில சோமதேரரின் முதல் சிரார்த்த தினம் அனுஷ்டிக்கப்படும் வேளையில் பௌத்த மக்கள் கௌதிப்படைந்துள்ளனர். ஜனாதிபதியோ சங்கீதக் கச்சேரிகளை நடத்துகின்றார். மாவட்டங்கள் தோறும் தனது பத்துவருட சேவை நிறைவுக்கொண்டாட்டங்களை மேடையேற்றிவருகின்றார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஒரு வேளை சாப்பாட்டிற்கே மக்கள் கஷ்டப்படுகின்றனர். ஆனால், ஜனாதிபதியோ நாட்டு மக்களை திசைதிருப்ப எதிர்க்கட்சியினரைப் பழிவாங்கும் படலத்தை ஆம்பித்துவிட்டார்.

ஆறுவருடங்கள் ஆட்சிசெய்வதற்கு மக்கள் ஆணைபெற்ற எங்களது அரசைக் கலைத்துவிட்டார் ஜனாதிபதி. தாம் ஆட்சிக்கு வந்தால் மூன்றே மாதத்தில் வறுமையை ஒழித்துவிடுவோம்; பட்டதாரிகள், அரச ஊழியர்களுக்கு 70வீத சம்பள உயர்வு வழங்குவோம் என பொய் வாக்குறுதி அளித்து ஆட்சியைக் கைப்பற்றினார்.

ஆனால், இப்போது அதனை நிறைவு செய்ய முடியாமல் மூச்சுத் திணறுகின்றார்.

இப்பொழுது வறுமை ஒழிப்பு வரவு - செலவுத் திட்டம் ஒன்றை முன்வைத்திருப்பதாக பல கோடி ரூபாவை செலவுசெய்து பிரசாரப்படுத்தினார். ஆனால், வரவு - செலவுத் திட்டம் வெளிப்படுத்தப்பட்டபோது அது புஷ்வாணமாகிவிட்டது.

ஐ.தே.க. தனவந்தர்களுக்கு ஆதரவாக இருக்கின்றது என்று குறைகூறினார். ஆனால் இப்போது சாதாரண பொதுமகனும் மாதாந்தம் 1,200 ரூபா வருமான வரிசெலுத்தவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திவிட்டார்.

ஏழைப் பொதுமக்கள் வங்கிகளில் சேர்த்து வைக்கும் சேமிப்புகளுக்கான வட்டியைக் குறைத்துவிட்டார். அதேவேளை, தனவந்தர்களுக்கு வழங்கும் கடன் தொகைக்கான வட்டி வீதத்தையும் குறைத்துவிட்டார். இது முதலாளிகளுக்கு ஆதரவானதாகத் தெரியவில்லையா? ஏழைகளின் வயிற்றில் அடித்துவிட்டார்.

இப்பொழுது நாட்டில் சர்வாதிகாரம் தலைதூக்கிவிட்டது. இந்தச் சர்வாதிகார ஆட்சியை ஒழிக்கும்வரை நாம் இப்போது ஆரம்பித்துள்ள மக்கள் போராட்டம் தொடரும்.

எந்த ஓர் அச்சுறுத்தலுக்கும் அடிபணியப் போவதில்லை என்று பந்துல குணவர்தன கூறினார். (க-8)

## வவுனியாவில் இருவர் நஞ்சருந்தி மரணம்

வவுனியா பாகற்குளம் பகுதியில் நேற்றுமுன தினம் இருவர் நஞ்சருநதி மரணமாகியுள்ளனர்.

நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவியான பாலபாஸ்கரன் தர்சினி (வயது 18), பிமலை கிருஷ்ணன் (வயது 22) என்ற இருவருமே நஞ்சருந்தி மரணமாகியுள்ளனர்.

பாகற்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இருவரும் நஞ்சருந்திய நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அங்கு மரணமானார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வவுனியாப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(8-13)

## ஈராக்கில் பிடிபட்ட தினேஷ் ஞாயிறு நாடுதிரும்பினார்

ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட தினேஷ் ராஜரட்ணம் இலங்கை திரும்பியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை அவரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் காலை சந்தித்து உரையாடினார் தினேஷ்.

தினேஷ் ராஜரட்ணம் பின்னர் ஊடகத்துறையினர் மத்தியில் உரையாற்றினார். அவர் தனது அனுபவங்கள் குறித்து தெரிவித்ததாவது:-

நான் இலங்கையன் என அறிந்ததும் தீவிரவாதிகள் இரக்க சுபாவத்துடன் நடந்துகொண்டனர். என்னை விடுவிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டிராவிட்டால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும். என்னுடன் கைது செய்யப்பட்ட 7 பேரில் 5பேரை தீவிரவாதிகள் கொன்றுள்ளனர். என்னை விடுதலை செய்து உதவிய அரசுக்கும் வெளிவிவகார அமைச்சிற்கும் நன்றி - என்றார். (க-8)

# சபாநாயகருக்கு எதிராக இப்போதைக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை இல்லை!

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இப்போதைக்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டாம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

சபாநாயகர் லொக்கு பண்டார, நாடாளுமன்றத்தில் அமைதியை ஏற்படுத்துவதில் அண்மைய நாளகளில் உரிய முறையில செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் மீது நம்பிக கையில்லாப் பிரேரணையை கொண்டுவர ஆளும்கட்சி முயற்சிகளை மேற்கொண்டுவந்தது.

இந்த நிலையில் அதனை உடனடியாக கொண்டுவரவேண்டாம் எனவும், அதனை கொண்டுவர வேண்டிய தருணம் குறித்து தான் அறிவிப்பார் எனவும், தமது ஆளும்கட்சியினருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

அவரின் அறிவுறுத்தலின்படி எதிர்வரும் ஜனவரி மாதம் நடுப்பகுதி வரை சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படாது எனக் கூறப்படுகிறது.(க-8)

# ரணில் ஞாயிறன்று பாங்கொக் பயணம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் காலை பாங்கொக் பயணமானார். அங்கு இரண்டு நாள்கள் தங்கியிருந்து தாய்லாந்தின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்திக்கவுள்ள ரணில் அங்கிருந்து சிங்கப்பூர் மற்றும் மலேஷியாவுக்குச் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நாடுதிரும்பும் எதிர்க்கட்சித் தலைவர் அன்றையதினம் மாலை கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நடைபெறும் கட்சியின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

ஜனவரி முதல் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களை ஐ.தே.க. மேற்கொள்ளவுள் ள தால் அந்தத் தேர்தல் முடியும்வரை எதிாக்கட்சித் தலைவர் வெளிநாட்டுக்கான விஜயங்களை மேற்கொள்ளமாட்டாரென கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (க.8)

# ஐ.தே.கட்சிக்கு மீண்டும் பதவி ஆசை வந்துள்ளது அதனால் தான் குண்டுகளை வெடிக்கவைக்கிறதாம்

## குற்றம் சாட்டுகிறார் ஜனாதிபதி



தேர்தலில் படுதோல்வி அடைந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு மீண்டும் பதவி ஆசை ஏற் பட்டுவிட்டது. இதனால் குண்டுகளை வெடிக்க வைத்தும், கொலைகளைச் செய்தும், அட்டகாசங களை புரிந்து வருகின்றது ஐ.தே.கட்சி. நாட் டில் பயங்கரவாதத்தை மீண்டும் கட்டவிழ்த்து காட்டுத்தர்பார் நடத்த அக்கட்சி முன்வந்துள் ளது. அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். மீண் டும் பதவிக்குவரும் ஆசையுடன் தென்னிலங் கையில் குண்டுகளை வெடிக்க வைக்குமாறு ஐ.தே.கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் மூவர் பிரபாகரனிடம் கேட்டபோது அவர் அதனை நிராகரித்துவிட்டார். மக்கள் இதனை நன்கு தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க. ஜனாதிபதியாகப் பதவியேற்று 10 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி நடை பெறும் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக மாத்தறை சனத ஜெயசூரிய விளையாட்டுத் திடலில் கடந்த ஒரு வாரமாக நடந்த நிகழ்வுகளின் இறுதிநா ளான நேற்றுமுன்தினம் ஜனாதிபதி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று ஐ.தே.கட்சியினர் நாடாளுமன்றத் தைக் குழப்பவும், அமளிதுமளியும் இடம்பெறும் கூட்டமாக மாற்ற முனைகிறார்கள்.

தமது கட்சிக்காரரான மகேஸ்வரன் எம்.பி யைக் கொண்டு செங்கோலை அபகரிக்கும் நிலைக்கு வந்துள்ளது. எக்காலமும் அடாவடித் தனத்தை மேற்கொள்ளும் அக்கட்சிக்கு இவை கள் எல்லாம் கைவந்த கலையாகும்.

நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. நடத்தும் அட்டகாசங்களை அவர்களது தலைவர் ரணில விக்கிரமசிங்கவினால் கட்டுப்படுத்த முடியாது போனால் அவர்களை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்று எமக்குத் தெரியும்.

எம்மிடம் கருணையும், அன்பும் அதிகம். இத னால்தான் நாங்கள் பலவீனமடைந்தவர்கள் என்று சிலர் நினைக்கின்றனர்.

தவறு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வருக்கு எதிராக நாட்டின் உயர்நீதிமன்றம் மிக வும் சுயாதீனமாகவும் மிகவும் சரியான முறை யிலும், தீர்ப்பொன்றினை வழங்கியுள்ளது. அந்த உறுப்பினரின் பெயரை நான் கூறத்தேவை யில்லை; மக்களுக்கு அவரை நன்கு தெரியும்.

ஆனால், இந்த ஐ.தே.க. வன்முறையாளர் கள் என்ன செய்கின்றனர்? உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடாளுமன்றத்தில் மாற்றலாம் என அவர்கள் நினைக்கின்றனர். ஜி.எல்.பீரிஸ் என்ற பேராசிரியர் தான் இதனைக் கூறியிருக்கின் றார்.

அவர் உண்மையில் பேராசிரியரா என்பதை ஆராய்ந்து கூறுமாறு நான் சி.ஐ.டியினரிடம் கூறி யிருக்கின்றேன். உண்மையில் சட்டம் பற்றி அறிந்திருந்தால் அப்படிக் கூறியிருக்கமாட்டார். அவரின் ஆலோசனைப்படி நாடாளுமன்றத்தின் ஊடாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்ற முயற்சி எடுக்கப்படுகின்றது. ஆனால் உயர் நீதிமன றத்தின் தீர்ப்பை நாடாளுமன்றத்தின் ஊடாக மாற்ற முடியாது என்பது சட்டம் படித்த ரணி லுக்குத் தெரியாதா? தவறு செய்வோர் எந்தப் பெரியவர்களானாலும் இனி அவர்களைத் தண் டிக்காமல் விடமாட்டோம்.

இந்தியாவின் பிரபல நடிகரான சாருகஹானின இசை நிகழ்ச்சிக்கு கிரனேட் எறிந்து இந்த நாட்டின் நற்பெயருக்கே சில விஷமிகள் இழுக்கை ஏற்படுத்தியிருப்பது கண்டிக்கத் தக்க செயலாகும்.

ஐ.தே.க.பதவியிலிருக்கும் போது இனப் பிரச்சினைத் தீர்வுக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரி வித்தோம். நாங்கள் பதவிக்கு வந்ததும் ஐ.தே.க. எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இருகட்சியினரும் மாறிமாறி எதிர்ப்புத் தெரிவித்துக்கொண்டால் இந்த நாடு அழிவை நோக்கியே செல்லும்; ஒருபோதும் உருப்படாது. இந்த இடத்தில் வடக்கு-கிழக் குப் பிரச்சினைகளை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் அதற்கு கட்சி, இன வேறுபாடுகள கூடாது. எமது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அனைத்துக் கட்சிகளினதும் பூரண ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

இன்று ஸ்ரீல.சு.கட்சி ஏனைய கட்சிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட், ஜே.வி.பி. மற்றும் தமிழ்க் கட்சிகள் சிலவற்றினதும், முஸ்லிம் காங்கிரஸ் சில உறுப்பினர்களதும் பூரண ஒத்துழைப்பு டன் சக்தி பெற்று வீறுநடை போடுவதால் ஸ்ரீல. சு.கட்சியையோ இன்றைய ஆட்சியையோ எவராலும் அழித்துவிட முடியாது - என்றார். (க-8)

# ஐ.நா.செயலர் பதவிக்கு தனபால தெரிவானால் இலங்கை சமாதான முயற்சிக்குப் பெரும் ஊக்கம்

## அவரே வெளியிடும் நம்பிக்கை

கொழும்பு,டிசெ.14

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்காக 2006 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தலில் ஆசியாவைச் சேர்நத ஒருவர் தெரிவு செய்யப்படக்கூடிய சாத்தியம் அதிகமாகவே இருப்பதாக அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளரும், ஐ.நா.செயலா ளர் பதவிக்கான வேட்பாளருமான ஜயந்த தனபால நேற்றுத் தெரிவித்தார்.

ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டி யிடுவதற்காகத் தாம் எடுத்த தீர்மானம் தொடர் பில் ஜயந்த தனபால நேற்றுமுன்தினம் உத யனுக்குக் கருத்து வெளியிட்டபோது, இந்தப் பதவிக்கு சிலவேளை தாம் தெரிவுசெய்யப் பட்டால், நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு அது பெரிதும் பக்கபலமாக இருக்குமென்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்கான தேர்தல் 2006ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறவுள்ளது. 2007 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து புதிய செயலாளர் நாயகத்தின் பதவிக்காலம் ஆரம்பமாகும். இந்தப் பதவிக்கு தாய்லாந்து வெளிவிவகார அமைச்சரின் பெயர் இப்போதைக்கு சிபார்சு செய்யப்பட்டுள் ளது. எம்மைப் பொறுத்தவரை இதற்கான பிரசாரப் பணிகளை இப்போதே ஆரம்பித்தால் நாம் குறிப பிட்ட இலக்கை அடையமுடியும். இந்தப் பதவிக்கு நான் போட்டியிடப்போகிறேன் என அமெரிக்கா வின் முன்னணி ஊடகங்கள் பல ஏற்கனவே செய்திகள் வெளியிட்டிருந்தன.

இந்தப் பதவிக்குப் பெரும்பாலும் ஆசியா வைச் சேர்ந்த ஒருவர் வெற்றிபெறக்கூடிய வாய்ப் புக்கள் அதிகமாக உள்ளன. இந்தப் பதவிக்கு சில சமயம் நான் தெரிவு செய்யப்பட்டால் இலங் கையின் சமாதான முயற்சிகளுக்கு பெரும் ஒத்துழைப்பை வழங்கமுடியும் - என்றார் அவர். (ஐ-க)

# குண்டுவெடிப்புக் காலம் மீண்டும் ஆரம்பம் அரச பயங்கரவாதமும் தலைதூக்குகிறது

## கொழும்புச் சம்பவம் குறித்து ஐ.தே.க.இப்படி விமர்சனம்

கொழும்பு,டிசெ.14

இலங்கையில் மீண்டும் குண்டு வெடிப்புக் காலம் ஆரம்பித்துவிட்டது; நாட்டுமக்கள் மத்தியில் மரணபயம் ஏற்பட்டுள்ளது. கொழுமபு குதிரைப் பந்தயத்திடலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு ஓர்அரச பயங்கரவாதமே. இதனால் ஏற்பட்ட அனர்த்தங்கள் அனைத்திற்கும் அரசே பொறுப்பேற்க வேண்டும்.

- இப்படி அரசின் மீது குற்றம் சாட்டுகின் றார் இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை கள் முன்னாள் அமைச்சரும், ஐ.தே.கட்சி எம்.பி யுமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற சில நிமிடங் களில் அரச ஊடகங்களில் ஒளிபரப்பப்பட்ட செய்தியில் கோட்டைப் பிரதேச ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், ஜாதிக ஹெல உறுமய பிக்குமாரும் இதில் சம்பந்தப் பட்டிருக்கின்றனர் எனத் தெரியவருவதாகக் கூறப்பட்டது.

அப்படிச் செய்தி வெளியிட்டமை திட்ட மிடப்பட்ட ஒரு சதி என்றார் ஜோன்ஸ்டன்.

நேற்றுமுன்தினம் கொழும்பில்நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அரசு அதிகாரப் பலத்தையும், பொலீஸ பலத்தையும் வைத்துக்கொண்டு எதிர்க்கட்சி யினரைப் பழிவாங்க ஆரம்பித்துவிட்டது.

நீதிமன்றங்களையும், நீதிபதிகளையும், பொலீஸ் திணைக்களத்தையும் கிழிகிழி எனக் கிழித்தார் ஜனாதிபதி. அதைப்பற்றி எதுவும் கருதாமல் நாட்டின் எங்கோ ஒரு மூலையில் பேசிய ஒரு பேச்சுக்காக எஸ்.பி.திஸநாயக்க வுக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண் டனை வழங்கியுள்ளது. ஜனாதிபதியினால் மோச மாக விமர்சிக்கப்பட்ட அதே நீதிமன்றம், இந் தத் தீர்ப்பு ஏற்கனவே எழுதப்பட்ட தீர்ப்பு.

எதிர்க்கட்சியில் இருந்து அரசின் பக்கம் 'பல்டி' அடித்து அமைச்சரான ரோஹித்த போகொல்லாகமவின் மனைவி பட்டப்பகலில் பிரபல மருத்துவ நிபுணர் ஒருவரை அவரது வீட்டிற்குள்ளேயே புகுந்து கொலை செய்ய முயன்றதோடு கத்தியால் குத்திக் காயப்படுத் தியும் உள்ளார்.

ஆனால், அவரைக் கைதுசெய்ய எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் கொலைக்கு சூத்திரதாரியாக இருந்தார் என சந்தேகிக்கப்படும் ஒரு வருக்கு லொத்தர் சபைப பணிப்பாளராக நியம னம் வழங்கப்பட்டுள் ளது. அவரைக் கைது செய்யவில்லை. அந்த நபர் நாட்டை விட்டே ஓடிவிட்டார்.

கடந்த 11 ஆம் திகதி குதிரைப்பந்தயத் திடலில் பொலீஸாரைத் தாக்கமுயன்ற காடை யர்கள் 12 பேரை கறுவாக்காடு பொலீஸார் கைது செய்தனர். ஆனால், சில நிமிடங்களில் மேலிட உத்தரவின் பேரில் இவர்கள் அனை வரும் விடுதலை செய்யப்பட்டனர். அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தவர்கள் விசாரணை ஏதும் இன்றி விடுவிக்கப்பட்டமை எவ்வாறு?

அதேவேளை, குதிரைப்பந்தயத்திடலில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற சில நிமிடங்க ளில் அதன் சூத்திரதாரி கோட்டை தொகுதி எதிர்க்கட்சி உறுப்பினர் என்று அரச ஊடகங் கள் செய்தி ஒலி, ஒளிபரப்பிவிட்டன.

அவ்வளவு துரிதகதியில் விசாரணை நடத்தியவர் யார்? யாரைக் கைது செய்துள்ள னர்? எப்படி இவ்வளவு தெளிவாகக் கூறுகின்ற னர்? ரூபவாஹினிக்கு இந்தச் செய்தியைக் கொடுத்தவர் யார்? செய்தி அறிக்கையைத் தயாரித்தவர் யார்? - அரசு குண்டுவெடிப்புக்கு முன்னரே இந்த செய்தி அறிக்கையைத் தயாரித்து வைத்திருந்ததா? ரூபவாஹினிக்கு இது ஏற்கனவே தெரியுமா? அதன் சூத்திரதாரி கள் யார்? - இவ்விடயம் தொடர்பாகப் பொலீஸ்மா அதிபர் பாரபட்சமற்ற விசாரணை நடத்தி உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஜனாதிபதியின் அரசு தனது அதிகாரப் பலத்தைப் பயன்படுத்தி எஸ்.பி.திஸநாயக் கவை சிறையில் அடைத்துவிட்டது.

நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதி களை செயற்படுத்த முடியாத அரசு எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கைதுசெய்தும், சிறையில் அடைத்தும் நாட்டு மக்களை திசைதிருப்ப முயல்கின்றது. - என்றும் ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ எம்.பி. தெரிவித்தார். (க-8)

# சாருக்ஹான் குழுவினர் உடன் பாதுகாப்பாக நாடு திரும்பினர்

பெரும் பரபரப்புகளுக்கும், பதற்றங்களுக் கும் மத்தியில் கொழும்பில் இசை நிகழ்ச்சியை நடத்திய பிரபல ஹிந்தி நடிகர் சாருக்ஹான் தலைமையிலான குழுவினர் நேற்று அதிகாலை உடனடியாக இந்தியா நோக்கிப் புறப்பட்டனர்.

விசேட அதிரடிப்படையினர் கொமாண்டோக் களின் பாதுகாப்புடன் விமான நிலையம் அழைத்துச் செல்லப்பட்ட சாருக்ஹான் குழுவி னர் நேற்று முன்தினம் அதிகாலை இரண் டரை மணியளவில் இந்தியா நோக்கிப் புறப் பட்ட விமானத்தில் ஏற்றி அனுப்பிவைக்கப்பட் டனர்.

இது தொடர்பாக தகவல் தெரிவித்த கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரால யத்தின் பிரதித்தூது வர் மோகன்குமார், இந்தியக் கலைஞர் கள் பாதுகாப்புடன் நாடு திரும்பினர் என வும் நிகழ்ச்சி ஏற்பாட் டாளர்கள் பத்திரமாக அவர்களை வழிய னுப்பினர் எனவும் தெரிவித்தார். (க-10)

# ஆனைக்கோட்டையில் இன்று ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.14

ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக் கலநாயகி முன்பள்ளிச் சிறார்களின் ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அடைக்கலநாயகி அரங்கில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வு அடைக்கல நாயகி ஆலய பங் குத் தந்தை நேசராஜா தலைமையில் இடம் பெறும். (3-204)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

ஈரவிழிகளுடன் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 29 - 05 - 1939



உதிர்வு 17 - 11 - 2004

அமரர் நாகமணி நாகராசா

(இளைப்பாறிய சாரதி, இ.போ.ச.மன்னார் சாலை)

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து அமரராகி விட்டீர்களே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை மேற்கு-6 வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் மன்னார் கீரியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரராகிய எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (15.12.2004) புதன்கிழமை திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறவுள்ளன.

அன்னாரது வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதியபோசனமும் அன்னாரது இல்லத்தில் 17.12.2004 வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர் களைக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

ஓம் சாந்தி

தாழ்வுபாடு வீதி, கீரி, மன்னார்.

தகவல்: த.மனோன்மணி, ஓட்டுமடம்.

- குடும்பத்தினர். (சி9511)(42-16-18)


நிபுணத்துவ முறையில் சகல விதமான

போட்டோ கொப்பியர்கள், பெக்ஸ் மெஷின்கள்

பழுதுபார்த்தல், சேர்விஸ் செய்தல்.

SHARP•CANON•TOSHIBA•GESTETNER

மிகவும் நம்பிக்கையான சேர்விஸ் சென்டர்.



- உத்தேச செலவு தொகை விபரம் இலவசமாக வழங்கப்படும்.
- அதி நவீன முறையை கையாண்டு, உத்தரவாதத்துடன் பழுதுப்பார்க்கப்படும்.

சகல விதமான போட்டோ கொப்பி இயந்திரங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களும் எம்மிடம் உண்டு.

போனஸ் ரூபா 500/= விருந்து

ஸ்டார்லைட் எலக்ரோனிக்ஸ்

763, 2nd Division, Maradana Rd, Colombo - 10
Tel: 2693655, 2681711, Fax: 2681712.

TALENT

புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தினால் நவம்பர் 22 முதல் 30 வரையில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த புத்தக விற்பனையைப் பொதுநிறுவனங் களின் வேண்டுகோளுக்கிணங்க டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை நீடித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 2573.

(C/39459) (42-16-18)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவல்லாத பொருள்கள் கையளிப்பு

திருவையாறு,டிசெ.14

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக பளைப் பிரதேசத்தில் வெள்ளப் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பொருள்களை ஒக்ஸ்பாம் நிறுவனம், ஏ.எஸ்.பி. நிறுவனம், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பளை உதவி அரச அலுவலகம் ஆகியன இணைந்து வழங்கின.

ஏ.எஸ்.பி. நிறுவனம் 400 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்களும், 76 குடும்பங்களுக்குக் கூரை விரிப்புக்களும் வழங்கியுள்ளது.

மண்[illegible]ப அடுத்து சுத்தமான குடிதண்ணீர் பெறுவ[illegible]க யுனிசெவ் நிறுவனம் ஒரு நீர்த்தாங்கியும், ஒக்ஸ்பாம் நிறுவனம் 3 நீர்த்தாங்கிகளையும் வழங்கியுள்ளது.

இதேவேளை -

ஒக்ஸ்பாம் நிறுவனம் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சிவநகர் கிராமத்தைச் சேர்ந்த 34 குடும்பங்களுக்குக் கூரை விரிப்புக்களையும் வழங்கியுள்ளது. (8-393-204)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

## காவல்துறையின் செயற்பாடுகள் விஸ்தரிப்பு

புதுக்குடியிருப்பு,டிசெ.14

தொடரும் விபத்துக்களைத் தடுக்கும் முகமாக தமிழீழக் காவல்துறையினர் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை மக்களுக்கு விளக்கும் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் ஒரு கட்டமாக புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு ஆகிய பிரதேசங்களில் உள்ள வீதிகளில் வேகத் தடைகளை நிறுவி, போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதனால், வாகனம் ஓட்டிகள் மிகவும் அவதானத்துடன் வீதியில் வாகனங்களைச் செலுத்துவதைக் காணமுடிகிறது. (3-353-204)

## விவசாயிகள் கௌரவிப்பு

பரந்தன்,டிசெ.14

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 65 சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திருமதி சீ.ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் ந.கந்தசாமி, அரச அதிபர் தி.இராசநாயகம், முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) கோகுலதாசன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளே கௌரவிக்கப்பட்டனர். (3-352-204)

# பொதுச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

பரந்தன்,டிசெ.14

கரைச்சி பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பரந்தன் பொதுச் சந்தையில் மலசலகூடம் இன்மையால் மக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்தையில் மலசல கூடங்கள் அமைப்பதற்கான அத்திபாரம் இடப்பட்டு பல காலமாகியும் மேற்கொண்டு வேலைகள் செய்யப்படாது காணப்படுகிறது.

பொது இடங்களை மக்கள் அசுத்தமாக்கி வருவதால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்படுகிறது.

இதுதொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(8-352-204)



விசுவமடுப் பிரதேச மக்களால் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50ஆவது பிறந்த நாள் தருமபுரம் வித்தியாலயத்தில் கொண்டாடப்பட்டது.

50 பொங்கல் பானைகளைக் கைகளில் கொண்டு பாடசாலை மாணவியரின் பான்ட் வாத்திய இசையுடன் தேசிய எழுச்சிப் பேரவையினர் அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: பரந்தன் செய்தியாளர்)*

## தபால்பெட்டியின்றி மக்கள் சிரமம்

முரசுமோட்டை, 2ஆம் கட்டை பிரதேசத்தில் தபால் சேகரிப்புப் பெட்டி இன்மையால் மக்கள் பெரும் சிரமமடைகின்றனர்.

இப்பிரதேசத்தில் வைக்கப்பட்டிருந்த தபால் பெட்டி பழுதடைந்ததையடுத்து தபால் விநியோகிப்பவர் இப்பெட்டியை எடுத்துச்சென்று விட்டார். ஆனால் பல மாதங்களாகியும் புதிய தபால் பெட்டி வைக்கப்படவில்லை.

இதனால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் நெடுந்தூரம் பயணம் செய்தே தபால்களை சேர்ப்பதாகவும், இதனால் முக்கியமான தபால்களை உரிய காலத்தில் சேர்ப்பிக்கமுடியாதுள்ளதாகவும், உரியவர்கள் விரைவில் தபால் பெட்டி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-352-204)

## மீன் உணவு பதனிடல் பயிற்சி வகுப்பு

மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் ஏற்பாட்டில் மீன் உணவு பதனிடல், சந்தைப் படுத்தல் தொடர்பான பயிற்சி வகுப்பு மன்னார் தேவன்பிட்டியவில் நடைபெற்றுவருகிறது.

கடந்த 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி வகுப்பு 15நாள்கள் தொடர்ந்து இடம்பெறும். இப்பயிற்சி வகுப்பில் முதற்கட்டமாக கணவனை இழந்த 10 பெண்களும், 10 பயனாளிகளும் பயன் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (8-405,204)

## எயிட்ஸ் தொடர்பான கருத்தரங்கு, கொடிவாரம்

வட்டக்கச்சி,டிசெ.14

எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், சுகாதாரக் கல்வி அலுவலர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் எயிட்ஸ் நோய் தொடர்பான கருத்துரைகளை நிகழ்த்துகின்றனர்.

சமூகத்திலுள்ள பல்வேறு மட்டத்தினரும் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வை பெறவேண்டும் என்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வதாக பிரதி மாகாண சுகாதாரப்பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.(8-405-204)

★ ★ ★

சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் கொடிவாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளையினர் பாடசாலைகள், பொது இடங்கள் போன்றவற்றில் பிரசாரத்தினை மேற்கொண்டு வருவதைக் காணமுடிகிறது. (8-353-204)

## உதயன் பதிவில் பொதிந்தவை

கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.

உதயனின் உதயகாலம் தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.

### 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில்...

மாத இறுதியில் அரசின் பதில் இந்தியாவிடம் — 10.01.1986

நேருக்கு நேர் மோதல் முல்லைத்தீவில்
நான்கு படை வீரர் பலி சூடுபட்டு 13 பேர் மரணம் — 08.01.1986

பாரதம் உதவினாலேயே கொலைகளை நிறுத்தலாம்
தொண்டமான் கூறுகிறார் — 10.01.1986

சித்திரவதையை நிறுத்த அவசர கோரிக்கை — 10.01.1986
2 ஆவது முறையாக டிச. 24 இல் மன்னிப்புச் சபை ஜனாதிபதி ஜே. ஆருக்கு அனுப்பிய மகஜர்

வெள்ள அகதிகள் பட்டினி கிடக்கும் அபாயத்தில்...! — 11.01.1986
மட்டுநகரை உலுக்கும் உணவுத் தட்டுப்பாடு

இராமேஸ்வரம் கப்பல் சேவை பெப்ரவரி முதல் — 11.01.1986
ராஜீவின் நிபந்தனையை முறியடிக்கும் முயற்சியா?

தேயிலைக்கு பாதுகாப்பு — 11.01.1986
கொழுந்து பறிக்கும் இடத்தில் இருந்து கப்பல் வரைக்கும்
அமைச்சர் கூட்டிய மாநாட்டில் தகவல்

ஆலயம் சென்ற பக்தர்களுக்கு திடீரென வந்து விழுந்தது சூடு! — 11.01.1986
தொண்டமானாற்றில் பதற்றம்

# கண்ணீர் அஞ்சலி

எமது கணித ஆசிரியர்
திரு.லோகநாதன்
அவர்களின் அன்புத் தந்தையார்

## மார்க்கண்டு

(கரவெட்டி கிழக்கு)

அவர்கள் 11-12-2004 அன்று காலமாகியதை அறிந்து குடும்பத்தினருடன் துயர் பகிர்கின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.
(39631)(26-16-18)



உ
ஸ்ரீ ராம ஜெயம்
**பொன்னாலை**
திருவருள்மிகு
ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான

## வைகுண்ட ஏகாதசி
### திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

*கொடியேற்றம் இன்று (14-12-2004)*
*செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணி*
மார்கழி மாதம் 7ஆம் நாள் 22-12-2004
புதன்கிழமை வைகுண்ட ஏகாதசித் தினம்
அதிகாலை 3.00 மணிக்கு சங்காபிஷேகம்
அதிகாலை 5.30 மணிக்கு சொர்க்க வாசல் தரிசனம்
முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை
முற்பகல் 11.00 மணிக்கு இரதோற்சவம்
இரவு வைகுண்ட ஏகாதசி புராண படனமும் பஜனையும் நிகழும்
மார்கழி மாதம் 8ஆம் நாள் 23-12-2004 வியாழக்கிழமை
காலை 9.00 மணிக்குத் திருவடிநிலை புறப்படல்
முற்பகல் 11.00 மணிக்கு தீர்த்தோற்சவம்
மஹோற்சவ தேவஸ்தான பிரதமகுரு:
"வேதாகம கிரியா கலாபூஷணம்"
**ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்**

குறிப்பு:
1) அடியார்கள் ஏகாதசி தினத்தன்று இரவு வெளிவீதி பிரதட்சணம் 108 தரம் வருவதற்கு நாராயணன் திருவருள் கூடியுள்ளது.
2) மார்கழி மாதம் 25ஆம் நாள் 09-01-2005 ஞாயிற்றுக்கிழமை ஆஞ்சநேய ஜெயந்தி அபிஷேகம், உற்சவம்.
3) 09-01-2005 காலை 8மணிக்கு வருடாந்தப் பஜனை, ஊர்வலம் ஆரம்பமாகி மதியம் ஒரு மணிக்கு சித்தங்கேணிப் பிள்ளையார் கோயிலை அடைந்து இரவு தேவஸ்தானத்தைச் சென்றடையும்.

பொன்னாலை,
சுழிபுரம்.
**தேவஸ்தான பரிபாலன சபை.**
(39629)(26-16-18)


நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு
அருண்ஸ் ஸ்போட்ஸ் மகிழ்ச்சியுடன் தரும்

## மலிவுவிற்பனை



**15-12-2004 புதன்கிழமை முதல்**

- உதைபந்து - ஸ்ரொக்கிங்ஸ், சின்கார்ப், பூட்ஸ்,
- கரப்பந்து - கரப்பந்து வலை - கரப்பந்துக் கம்பங்கள்
- கூடைப்பந்து - கூடைப்பந்து வலை
- வலைப் பந்து - வலைப் பந்து வலை - வலைப் பந்துக் கம்பங்கள்
- மென்பந்து
- கிரிக்கெட் பந்து
- கிரிக்கெட் பாற் (Bat) - விக்கெற்றுகள்
- மென் பந்து பாற்
- பட் மின்ரன் ராக்கெற்
- பட்மின்ரன் சட்டில் கொக்
- பட்மின்ரன் வலை
- மேசைப் பந்து ராக்கெற் - வலை - பந்து
- கரம்போட்
- ஜெர்ச்சி செற்
- ஈட்டி (600 கிராம், 800 கிராம்)
- தட்டு (1.5, 2)
- குண்டு (4 கிலோ 4.5 கிலோ)
- ஸ்பைக்ஸ் (காலணி)
- பளுதூக்கும் உபகரணங்கள் - 50 கிலோகிராம்
- உயரம் பாய்தல் கம்பமும் குறுக்கு பாரும்
- டம்பெல் செற் - 10 கிலோ
- பலவிதமான கண்கவர் நவீன வெற்றிக் கிண்ணங்கள்
- விளையாட்டு உருவங்கள்

இதனை விட -
பலவிதமான விளையாட்டுப் பொருள்கள் -
இவற்றினைப் பெற்றிட :-

**அருண்ஸ் ஸ்போட் ஸ்போட**

355, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.





## பீற்றர் ஷார்க்கின் விரிவுரைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஏற்பாட்டில், பல்கலைக்கழகப் புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றுவரும் சுவீடன் நாட்டு உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் ஷார்க்கின் விரிவுரைகள் இன்றும் நாளையும் பிற்பகல் 3 மணிமுதல் நடைபெறவுள்ளன.

உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி சி.க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் இன்றைய விரிவுரையில் 'வேடரின் மூலம் பற்றிய புதிய ஆய்வுக் கண்டுபிடிப்புக்கள்' என்னும் தலைப்பிலும் -

மெய்யியற்றுறைப் பேராசிரியர் ந.ஞானகுமாரனின் தலைமையில் நாளை நடைபெறும் விரிவுரையில் 'சமயங்கள் பற்றிய வியாக்கியானக் கொள்கைகள் பரிணாமவாதமும் அதற்கு மாறுபட்ட செயற்பாட்டு வாதமும்' என்னும் தலைப்பிலும் - உரையாற்றுவார். (3-202)

## நாயின் செயலால் நடந்த விபரீதம்

தென்மராட்சி,டிசெ.14

வீதியில் ஓடித்திரிந்த நாய் ஒன்று மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் புகுந்ததால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகள் உட்பட நால்வர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தனர்.

மீசாலைப் பகுதியில் கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி கிராம்புவிலைச் சேர்ந்த ஜெயதாசன் (வயது-35), அவரின் மனைவியான ஜெ.வனஜா (வயது-32), மகன்களான ஜெ.பிரகலாதன் (வயது-7), ஜெ.பிருந்தாபன் (வயது-4) ஆகியோர் இச்சம்பவத்தில் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (10-117)

## அதிபர் நியமனம்

வலி.தெற்கு,டிசெ.14

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் அதிபராக ந.அருட்பிரகாசம்பிள்ளை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையின் பிரதி அதிபரும் ஆரம்பப் பாடசாலையின் அதிபருமான ந.அருட்பிரகாசம்பிள்ளை இம்மாதம் 6ஆம் திகதி முதல் இப்பாடசாலை அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சோதி வேம்படி வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றிய ந.நடராசா ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து இவர் நியமனம் பெற்றுள்ளார்.(10-152)

## நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டது

வலி.தென்மேற்கு, டிசெ.14

யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கு அமைய சுகாதாரத் தொழிலாளர் நியமனம் வழங்குவதற்காக யாழ்சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் எதிர்வரும் 18ஆம் திகதி நடத்தப்படவிருந்த நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் விடுத்த அறிவித்தலுக்கிணங்க இந்த நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (10-135)

## வருடாந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.வை.எம்.சி.ஏயின் முதியோர் கழக அங்கத்தவர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல நாளை புதன்கிழமை காலை 10மணியளவில் வை.எம.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் சமுகந்தருமாறு வை.எம்.சி.ஏயின் பொதுச் செயலாளர் எஸ். ஜெராஜ சிங்கம் கேட்டுள்ளார். (10-190)

☆ ☆ ☆

யாழ்.வை.எம்.சி.ஏயின் அங்கத்தவர்களுக்கான வருடாந்த ஒன்று கூடல் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 530 மணியளவில் வை.எம்.ஏயின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்று கூடல் நிகழ்வில் அனைத்து அங்கத்தவர்களினையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-190)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர்
திருமதி யோகலீலா தேவசுந்தரம்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கந்தையா மங்கையர்க்கரசி

அவர்களின் மறைவு வேதனையைத் தருகிறது. அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.
(39641)(42-16-18-26)

# ஜனன தின நினைவு தினம்

மலர்வு
14 - 12 - 1935



உதிர்வு
29 - 01 - 2004

## அமரர் பரநிருபசிங்கம் பரம்சோதி

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், RRAN மாவட்ட இணைப்பாளரும்)

எமது அருமையான, இனிய பாசமிகு அப்பா,
மானிடப்பிறவியை மாண்புடை பிறவியாக்கி,
தனக்கே உரிய ஆளுமையினாலும்,
ஆற்றலினாலும் தனக்கும் பிறருக்கும்
பயனுறு வகையில் நிறைவாழ்வு வாழ்ந்து,
இறைவனடி சேர்ந்த இவ்வேளையிலும்,
அவரின் ஜனன தினத்தை நினைவு
கூரும் பாசமிகு உள்ளங்கள்,

*163,3ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(39636)(42-16-18-26)

மனைவி, பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி குலநாயகம்

தாவளை, இயற்றாலையை வசிப்பிடமாகக் கொண்ட இளையதமபி குலநாயகம் நேற்று (13.12.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் கந்தசாமி, இரத்தினேஸ்வரி, கணேசமூர்த்தி, பாஸ்கரன், நாகேஸ்வரி, வனஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாலிங்கம், இராசபூபதி, மகேஸ்வரி, இராகுலன், சிவகுலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவளை, இயற்றாலை,*
*கொடிகாமம்.*
(39633)(12)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பத்மநாதன் பத்மசிறி

அச்சுவேலி, பத்தைமேனியைப் பிறப்பிடமாகவும் பெல்ஜியத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் பத்மசிறி 12-12-2004 ஞாயிற்றுக்கிழமை பெல்ஜியத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் சந்திரகுமாரி ஆகியோரின் அன்புப் புதல்வனும் பத்மகுமார் (சுவிஸ்), பத்மகுமாரி (ஹொலண்ட்), பத்மராஜ் (லண்டன்), பத்மலதா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுவேதா, ஆகாஸ் (ஹொலணட்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் அக்ஷயனின் (ஹொலண்ட்) பாசமிகு மாமனும் சுபாசினி, சத்தியரூபன் (ஹொலணட்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
077 3107294. (39632)(26-16-18)

தகவல்:
R.S. மூர்த்தி.

## கோவிந்தர் கணபதிப்பிள்ளை



நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் குஞ்சர்கடையடியை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தர் கணபதிப்பிள்ளை 11-12-2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் திருமதி ரஞ்சிதமலர் (கனடா), திருமதி மாலினி (கனடா), தயாளன் (சுவிஸ்), திருமதி தயாளினி (சுவிஸ்), குணாளன் (சுவிஸ்), திருமதி சுபாசினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீஜெயலிங்கம், விக்னராசா, திருமதி மார்லீஸ், சண்முகலிங்கம், தயானந்தன் ஆகியோரின் மாமனாரும் திருமதி அகிலகண்டம், சிவசம்பு, திருமதி தங்கம்மா, திருமதி சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-12-2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குஞ்சர்கடை,
கரணவாய்.
(39632)(26-16-18)

தகவல்:
திருமதி இராசமணி
(மனைவி).



# பங்களாதேஷ் அணியுடனான முதல்டெஸ்ட் அபார ஆட்டத்தினால் இந்திய அணி வெற்றி!

டாக்கா,டிசெ.14

இந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி ஓர் இன்னிங்ஸா லும் 140 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியுள்ளது.

பங்களா தேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 184 ஓட்டங்கள் எடுத்தது. [redacted] அணி முதல் இன்னிங்ஸில் 526 ஓட்டங்கள் குவித்தது. ...ன்டுல்கர் ஆட்டமிழக்காமல் 248 ஓட்டங்களை யும் சகீர்கான் 75, கங்குலி 71 ஓட்டங்களையும் எடுத்தனர்.

342 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இனிங்ஸை விளையாடிய பங்களாதேஷ் 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 170 ஓட்டங்களை எடுத்தது. இஸ்லாம் ரானா 50 ஓட்டங்களுடனும் பைசியா 17 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். போட்டி தொடங்கிய சிறிது நேரத்தில் பைசியா 29ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். அவரது விக்கெட்டை பதான் கைப்பற்றினார். கடைசி விக்கெட்டுக்கு இஸ்லாம் ரானா வுடன் மொர்தாஜா ஜோடி சேர்ந்தார்.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ரானா கடைசியாக ஆட்டம் இழந்தார். பங்களாதேஷ் 53.2 ஓவர்களில் 202 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 140 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மஞ்சுரல் இஸ்லாம் ரானா 116 பந்துகளில் 11 பவுண்டரியுடன் 69 ஓட்டங்களும் இக்பால் 54 ஓட்டங்களும் எடுத்தனர். இர்பான் பதான் 6 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். முதல் இன்னிங்ஸில் அவர் 5 விக்கெட்டுக்கள் எடுத்து இருந்தார். மொத்தம் 11 விக்கெட்டுக்களை சாய்த்தார். கும்ளே 2 விக்கெட்டும், சகீர்கான், ஹாபஜன்சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி 17ஆம் திகதி சிட்டகாங்கில் தொடங்குகிறது. (10)




## சாதனையை நினைத்து ஆடாதீர்கள்; சகவீரர்களுக்கு கங்குலி எச்சரிக்கை



டாக்கா,டிசெ.14

"பங்களாதேஷ் அணிக்கு எதிராகச் சாதனை களை மனதிற்கொண்டு விளையாடாதீர்கள்" - என்று வீரர்களுக்கு எச்ரிக்கை விடுத்துள்ளார் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி.

இவ்விரு அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்று வருகிறது. அதையொட்டி கடந்த வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கங்குலி தெரிவித்ததாவது:

அனில் கும்ளே, சச்சின் ஆகியோர் மட்டுமே சாதனைக்கான வாய்ப்பில் உள்ளனர்.

எங்களுக்கு எதிராக பங்களாதேஷ் அணியின் ஆட்டம் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. அவர்கள் போட்டியிடுவதற்கு இன்னும் கால அவகாசம் வேண்டும். ரசிகர்களும் பொறுமையுடன் காத்திருப்பது அவசியம். இருந்தாலும் அவர்களை எளிதாக நினைத்து விளையாட மாட்டோம். மொத்தத்தில் வழக்கமான ஆட்டத்தை ஆடுவோம் என்றார் கங்குலி.

டாக்கா மைதானம் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக இருந்தாலும் கும்ளே, ஹர்பஜன் சிங் ஆகிய உலகப் பிரசித்திப்பெற்ற வீரர்கள் எந்த மைதானத்திலும் சிறப்பாகப் பந்துவீசும் திறமையைக் கொண்டுள்ளனர். இருந்தாலும் இந்திய அணிக்கு நிர்ப்பந்தம் கொடுப்போம்" என பங்களாதேஷ் அணித் தலைவர் ஹபிபுல் பசார் தெரிவித்துள்ளார். (10)

## இந்திய அணியின் தலைமையை ஏற்றுக்கொள்வதே எனது நோக்கம்

### அதிரடி வீரர் ஷேவாக் தெரிவிப்பு

புதுடில்லி,டிசெ.14

இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்டவர்களில் ஒருவர் ஷேவாக். இவர் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தவர். எதிர்காலத்தில் இந்திய அணியின் தலைமைப் பதவியை ஏற்பதே தனது நோக்கம் என அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் பேட்டி அளித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

கிரிக்கெட்டில் எனக்கு டெண்டுல்கர்தான் முனமாதிரியாகத் திகழ்கிறார். போட்டியின்போது அவர் எனக்கு ஊக்கம் அளிப்பார். டெண்டுல்கர் தலை சிறந்த வீரர். அவர் ஆடும்போது அதை மிகவும் ரசிப்பேன். எனது துடுப்பாட்டம் அவரைப் போலவே அமையவேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளேன்.

தொடக்க வீரராகக் களம் இறங்குவதில் மகிழ்ச்சியாக இருக்கிறது. எனினும் மத்திய வரிசை ஆட்டம்தான் விருப்பமாக இருக்கிறது. இதில் இன்னும் அதிகபடியான ஓட்டங்களை குவிக்க முடியும்.

எதிர்காலத்தில் அணியின் தலைவர் ஆவதே எனது நோக்கம். அதுவும் ஒரு நாள் போட்டிகளில் ஆடுவது என்பது மிகப் பெரிய சவாலுடன் ஆடக்கூடியது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஷேவாக் 104 ஒருநாள் போட்டிகளில் ஆடி 6* சதங்களுடன் 3061 ஓட்டங்கள் எடுத்துள்ளார். டெஸ்டில் 29 போட்டிகளில் ஆடி 2512 ஓட்டங்கள் குவித்துள்ளார். டெஸ்டில் பாகிஸ்தானுக்கு எதிராக 309 ஓட்டங்கள் குவித்துள்ளார் என்பது குறிப்பிடக்கதக்கது. (10)

## இலங்கை - நியூஸிலாந்து போட்டிகளின் விவரம்

இலங்கை கிரிக்கெட் அணி இம்மாத இறுதியில் நியூஸிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதில் பங்குபெறும் வீரர்களின் விவரம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

இரு அணிகளுக்கு இடையே முதலில் ஒரு நாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி ஒக்லாந்தில் நடக்கிறது. போட்டிகளின் விவரம் வருமாறு:-

எதிர்வரும் 26ஆம் திகதி முதல் ஒருநாள் போட்டி.

எதிர்வரும் 29ஆம் திகதி 2ஆவது ஒரு நாள் போட்டி.

ஜனவரி 3ஆம் திகதி 3ஆவது ஒருநாள் போட்டி.

ஜனவரி 4ஆம் திகதி 4ஆவது ஒருநாள் போட்டி.

ஜன. 8ஆம் திகதி 5ஆவது ஒருநாள் போட்டி.

ஜன. 15 - 19ஆம் திகதி வரை முதல் டெஸ்ட் போட்டி.

ஜன. 22 - 26ஆம் திகதி வரை 2ஆவது டெஸ்ட் போட்டி.

(10)

## இலங்கை அணியில் மீண்டும் ஆர்னோல்ட்

கொழும்பு,டிசெ.14

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையே எதிர்வரும் 26ஆம் திகதி நியூஸிலாந்தில் ஆரம்பமாகவுள்ள ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அணியில் சகலதுறை வீரர்கள் ஆர்னோல்ட் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக அணியில் இடம்பெறாத ஆர்னோல்ட் உள்ளூர் போட்டிகளில் நன்கு பிரகாசித்ததை அடுத்து அவர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழு தெரிவித்துள்ளது.

அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

மாவன் அத்தப்பத்து, சனத் ஜயசூரிய, மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்ககார, ரஸல் ஆர்னோல்ட், சமன் ஜயந்த, திலகரட்ண, டில்ஷான், உபுல் சந்தன, சமிந்தவாஸ், நுவன் சொய்ஸா, தில்ஹார பெர்ணாண்டோ, ரங்கன ஹேரத், இயன் டானியல், லஸித் தலிங்க, பர்வேஸ் மஹ்ரூப். (10)

### வெளிவாரிப் பரீட்சைகள் அலகின்

## வணிக முதற்தேர்வு பரீட்சையில் சித்தியடைந்தோரின் விவரங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட வணிக முதற் தேர்வு - 2001 பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள் வருமாறு:

தி.அபிராமி, சௌ.அல்பேட் மேரி, வி.தாரிணி, க.கிருத்திகா, சி.றதீஸ்குமார், ச.சயந்தி, ம.சூரியவதனா,க.வித்யா, செ.ஜனனி, செ.சிவமலர் -

திருமதி த.சுதாகரன், ஞா.லோகநாதன், ச.ஆனந்தகுமார், க.குகனேந்திரன், சி.சுகந்தன், செ.ஐங்கரன், தே.சுனீத்தா, சே.திருச்செல்வி, சே.பிளசிடா குமுதினி, த.யாழினி, ரா.மனோகரி, ச.அனுஷா, யோ.தர்சனா, பா.டொன்பொஸ்கோ, சு.காமினி, ப.ஹரிதா, யோ.ஜலஜா, பா.கமலவாசகி, ச.கார்த்திகா, சி.பிரதீபா -

பி.பிரவீனா, ப.சங்கீதா, ச.சௌந்தினி, அ.செல்வராணி, சி.சைலஜா, ச.சிவதர்சினி, இ.ஸ்ரீதரன், ரா.சுபாங்கி, ரா.சுகந்தரூபி, த.தனுஷா-

ப.தேனுகா, க.திசாகரன், ர.வான்சலிஸ்ராப்ரத்மி, ச.விஜிதா, ரா.வினோஜா, ஆ.யசோதினி, யோ.நிமலன், ச.சௌம்ஜா, ப.ஜகானா, ரா.ஜெயகௌரி -

சி.கஜசனா, ந.பிரகாஸ், ச.சண்முகப்பிரியா, கு.பிரகாசினி, செ.கவிதா, ப.தர்மசங்கரன், தா.கிருஷ்ணகுமாரி.

(10-12-202)

### வெள்ளத்தின் காரணமாக கோயிலாக்கண்டியில்

## வீடமைப்புத் திட்டப் பணிகளை இடைநிறுத்தும் அபாயநிலை

தென்மராட்சி,டிசெ.14

கோயிலாக்கண்டி மத்தியில் உலக வங்கி, ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டப் பணிகளை இடைநிறுத்தும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இத்திட்டங்களுக்குக் கட்டடப் பொருள்களை ஏற்றிச் செல்லும் ஸ்ரீமுருகன் வீதி ஊடாக வெள்ளம் பாய்ந்து செல்வதால் பொருள்களை ஏற்றிச் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த வாரம் கூரைத்தகடுகள், சிமெந்து ஆகியவற்றை ஏற்றிச் சென்ற வாகனங்கள் இவ்வீதியில் புதைந்ததால் போக்குவரத்து ஏழு மணி நேரம் தடைப்பட்டதுடன், வாகனங்களில் ஏற்றிவரப்பட்ட பொருள்கள் பயனாளிகளால் இரண்டு கிலோமீற்றர் தூரம் சுமந்து செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நான்கு வருடங்களாகக் கனரக வாகனங்களின் போக்குவரத்து இடம்பெற்றுச் சேதமடைந்து காணப்பட்ட இவ்வீதி வெள்ளத்தில் மூழ்கியதால் மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (10-117)



# கண்ணீர் அஞ்சலி



*தமிழ்ப் பேராசான், இலக்கிய கலாநிதி*

## க.சொக்கலிங்கம் (சொக்கன்)

அவர்களது மறைவினால்
துயருறும் தமிழ் நெஞ்சங்களுடன்
நாமும் இணைந்து கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
ஸ்தாபனத்தினரும், ஊழியர்களும்
யாழ்ப்பாணம் - கொழும்பு.

(ச-39596) (43-13-14)


# சிவா வீடியோ லைபிறறி

பிறந்தநாள், பூப்புனித நீராட்டு, திருமணம் ஏனைய நிகழ்வுகள் அடங்கிய பழைய புதிய வீடியோ பிரதிகளை (V.H.S.கொப்பி) சிறந்த வீடியோ சீடியாக (V.C.D) மாற்றம் செய்தும் D.V.Dயில் உள்ளவற்றை V.C.Dயாக மாற்றியும் தரப்படும். கொப்பிகளையும் சீடிக்களையும் குறைந்த விலையில் மறுபிரதி செய்தும் தரப்படும்.

**சிவா வீடியோ லைபிறறி,**
இராமலிங்கம் வீதி, முடமாவடி
(பூங்கனிச்சோலை அருகில்).
T.P.222 7152

(ச-39593) (29-43-13-14)


உ
சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
அத்திபாரமாக அமைந்துள்ள
பரமேஸ்வராக்கல்லூரியின் நிறுவுநரும்
சைவப் பெருவள்ளலாருமாகிய

## சேர் பொன்.இராமநாதன்

அவர்களின்
குருபூசைத்தின விழா

நாள்: நாளை (15.12.2004) புதன்கிழமை
நேரம்: காலை 7.00 மணிமுதல்
இடம்: ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சபா மண்டபம்.

நிகழ்ச்சி நிரல்

1. காலை 7.00 - 8.30 மணிவரை அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீபரமேஸ்வரப்பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் விசேட பூசையும்.
2. 8.30 மணிக்கு சேர் பொன்.இராமநாதன் திருவுருவச் சிலைக்கும், பல்கலைக்கழக சபாமண்டபத்திலுள்ள அவரின் உருவப்படத்திற்கும் துணைவேந்தர் அவர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வு.
3. 9.00 மணிக்கு சேர் பொன்.இராமநாதன் வேதாகம நிறுவன மாணவர்களின் வேதபாராயணம், திருமுறை ஓதல், அவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருநெல்வேலி.
(39645) (43-13-14)

இந்து மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


# விண்ணப்பித்து விட்டீர்களா ?

**IIS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2005**
**விண்ணப்ப முடிவுதிகதி - 15.12.2004**

IIS IIS IIS IIS IIS

டிசம்பரில் O/L பரீட்சையும்
ஏப்ரலில் A/L பரீட்சையும்
எடுக்கவிருக்கும் மாணவர்களே!

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையுள்ள காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு. IIS இன் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் கணனி உலகில் இணைந்து கொள்ளுங்கள்.

பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டியாக அமைவதற்கு இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

"உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி IIS"

INSTITUTE OF
INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், டிசெ.14

கோண்டாவில் கிழக்கு சபரீச ஐயப்ப சுவாமி ஆலய மகரஜோதி மண்டல மகோற்சவத்தில் இன்று காலை 7 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு ஐயப்பனுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று, பகல் 10மணியளவில் ஐயப்பன் தேரில் ஆரோகணித்து இருபாலை வீதியூடாக திருநெல்வேலியை வந்தடைந்து, பின்னர் மீண்டும் இராசபாதை வழியாக ஆலயத்தை வந்தடைவார்.

நாளை புதன்கிழமை காலை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெற்று மகோற்சவப் பெருவிழா பூர்த்தியடையும்.(எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.14

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான வைகுண்ட ஏகாதசி திவ்விய மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறவுள்ள இந்த உற்சவ நிகழ்வில், எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (3-15-202)

★ ★ ★

சரசாலை தெற்கு மகிழ்நின்ற வளவு இராமாவில் பிள்ளையார் ஆலயத்தில் தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு விசேட பூஜையுடன் பிள்ளையார் கதைப்படிப்பும் இடம்பெற்று வருகின்றது.

பிள்ளையார் கதைப் பூர்த்தி தினமான எதிர்வரும் 17ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு விஷேட அபிஷேகமும் விநாயகப் பெருமான் வீதியுலாவும் இடம்பெறும். (3-117-202)

★ ★ ★

வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் அமைதிவேண்டியும் இலட்சார்ச்சனையும் விஷேடஹோமமும் நடைபெற்று வருகின்றன.

பிள்ளையார் கதை பூசையினைத் தொடர்ந்து பிற்பகல் 3மணி தொடக்கம் 7மணிவரை நடைபெறும் இந்த நிகழ்ச்சி எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (3-161)

# மீசாலையில் நேற்று நடந்த விபத்தில் இருவர் படுகாயம்

மீசாலைப்பகுதியில் நேற்றுபிற்பகல் இடம்பெற்ற இராணுவ 'பிக்அப்' - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த மந்துவிலைச் சேர்ந்தவர்களான இராசதுரை பகீரதன் (வயது 22), செல்வராசா ஜீவதரன் (வயது 20) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

மந்துவில் பகுதியில் இருந்து மீசாலை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், சாவகச்சேரியிலிருந்து வந்த இராணுவப் 'பிக்அப்' வாகனமுமே விபத்துக்குள்ளானது எனக் கூறப்பட்டது.

காயமடைந்தவர்கள் இராணுவ 'பிக்அப்' மூலம் உடனடியாகச் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காகப் படையினரின் அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர். (எ-12)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்
முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 2004
முகாமைத்துவக் கற்கைகள் வர்த்தக பீடம்.

13.12.2004 இல் தடைப்பட்ட முகாமைத்துவக் கற்கைகள் வர்த்தக பீடப் பரீட்சைகள் 17.12.2004 தொடக்கம் பின்வரும் அட்டவணையின்படி நடைபெறும்.

13.12.2004 திகதிய பரீட்சை 17.12.2004 இல் நடைபெறும்.
14.12.2004 திகதிய பரீட்சை 18.12.2004 இல் நடைபெறும்.
16.12.2004 திகதிய பரீட்சை 19.12.2004 இல் நடைபெறும்.
17.12.2004 திகதிய பரீட்சை 20.12.2004 இல் நடைபெறும்.
20.12.2004 திகதிய பரீட்சை 21.12.2004 இல் நடைபெறும்.
21.12.2004 திகதிய பரீட்சை 22.12.2004 இல் நடைபெறும்.

மாணவர்கள் இந்த அறிவித்தலை அவதானித்துப் பரீட்சைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், - துணைவேந்தர்.
யாழ்ப்பாணம்.
2004.12.13.

(சி-39599)(30-13-14-43)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்.
முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 2004
கலைப்பீடம்

13.12.2004 இல் ஆரம்பிக்கவிருந்த கலைப்பீடப் பரீட்சைகள் 16.12.2004 தொடக்கம் பின்வரும் அட்டவணையின்படி நடைபெறும்.

13.12.2004 திகதிய பரீட்சை 16.12.2004 இல் நடைபெறும்.
14.12.2004 திகதிய பரீட்சை 17.12.2004 இல் நடைபெறும்.
16.12.2004 திகதிய பரீட்சை 18.12.2004 இல் நடைபெறும்.
17.12.2004 திகதிய பரீட்சை 19.12.2004 இல் நடைபெறும்.

மாணவர்கள் இந்த அறிவித்தலை அவதானித்து பரீட்சைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். - துணைவேந்தர்.

(சி-39598)(30-13-14-43)

# கண்ணீர் அஞ்சலி

முதுபெரும் தமிழறிஞரும்
எமது நல்வழிகாட்டியாக மிளிர்ந்தவருமான
அமரர் கலாநிதி

## க.சொக்கலிங்கம் (சொக்கன்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(39640) (43-13-14) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

# ஊர்காவற்றுறை பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல

பின்வரும் வேலைகளுக்குரிய கேள்விப் பத்திரங்கள் 23.12.2004 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் ஊர்காவற்றுறைப் பிரதேசசபை செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கின்றன.

01. கேள்விப் பத்திரங்களை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 'M9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்று ஒப்பந்தகாரர்களோ அல்லது [illegible] பொது ஸ்தாபனங்களோ 20.12.2004 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கீழே குறித்த தொகையைச் செலுத்தி ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கனிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியைக் கடித உறையில் இட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த வேலையைக் குறிப்பிட்டு, அரக்கு முத்திரை வைத்து *'செயலாளர் ஊர்காவற்றுறைப் பிரதேச சபை, ஊர்காவற்றுறை'* என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் [illegible] அனுப்பி அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் [illegible] மூலமாக [illegible] பிரதியைப் *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை*[illegible] பெட்டியில் இட்டு இரண்டா[illegible] க்தல் வேண்டும். [illegible] ளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி[illegible] ஆம் திகதி [illegible]
04. கேள்விகள் 23.12.2004 [illegible] பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறைப் பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலைவிவரம் | நிதிமூலம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம் (வற்வரி உட்பட) |
|---|---|---|---|---|
| 01. | சுருவில் - மெலிஞ்சிமுனை வீதி திருத்தவேலை | மகாநெகும | ரு.6250.00 | ரு.1150.00 |
| 02. | மேலைக்கரம்பன் கலையரங்கம் மீதிவேலை | DCB | ரு.3000.00 | ரு.1150.00 |
| 03. | காரைநகர் மருதபுரம் வீதி திருத்த வேலை | DCB | ரு.6500.00 | ரு.1150.00 |

பிரதேசசபை அலுவலகம்
ஊர்காவற்றுறை.
13.12.2004

(சி-39594)(29-13-14-43)

இரா.லோகநாதன்
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

# கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் *திரு.செ.நாகரத்தினம்* அவர்களின் அன்புத் தாயார்



திருமதி

**சரஸ்வதி செல்லையா**

அவர்களின் மரணச்செய்தியை அறிந்து நாம் பெரிதும் கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

இந்துக் கல்லூரி,
உரும்பிராய். (39653) (43-13-14)

இந்துக் கல்லூரிச் சமூகம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது உதவி முகாமையாளர் *திரு.நாகரட்ணம்* அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **செல்லையா சரஸ்வதி**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்துககு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி,
சுன்னாகம். (சு-39600) (43-13-14)

முகாமையாளர்,
ஊழியர்கள்.


## கலண்டர்கள், டயறிகள் மலிவு விலையில்

- விளம்பரக் கலண்டர்கள் 'சீவம்'
- 'மெய்கண்டான்' கலண்டர்கள்
- 'லீலா' கலண்டர்கள், டயறிகள்
- 'தீபம்' கலண்டர்கள்
- 'சீவம்' டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் அப்பியாசக் கொப்பிகள்,
பாட உபகரணங்கள் மற்றும் பல!

**வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.**

**பேப்பர் ஹவுஸ் PAPER HOUSE,**
**300, Hospital Road, Jaffna.**
(சு-39595) (43-13-14)


# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் இராசேந்திரம் (தேவராசா)

(இளைப்பாறிய எழுதுவினைஞர், ஆற்றுப்பள்ளத்தாக்குச் சபை)



கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சோமசுந்தரம் இராசேந்திரம் அவர்கள் நேற்று (13.12.2004) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நொத்தாரிசு அம்பலவாணர் சோமசுந்தரம் - பகவதியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி இசெல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருமதி கந்தையா சந்திரவதனி அவர்களின் அன்புச் சகோதரரும் சந்திரகாந்தி, சந்திரகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபாகரன், சந்திரராணி, சிவபாலன் (முகாமையாளர், இலங்கை வங்கி - காங்கேசன்துறை), காலஞ்சென்ற சிவதாசன், சிவநாயகி (மக்கள் வங்கி, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவமுரளிதரன், பிரசாந்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறறு, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கருவேலடி லேன்,*
*கொக்குவில் கிழக்கு.* (39642)(43-13-14)
இ.சந்திரகாந்தன் (காந்தன்)
குடும்பத்தினர்.

## திருமதி செல்லையா சரஸ்வதி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி செல்லையா நேற்று (13.12.2004) திங்கட்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுதுமலை அம்பலவாணர் செல்லையாவின் அருமை மனைவியாரும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அன்னம்மா தம்பதியின் இளைய மகளும் நாகரத்தினத்தின் (உதவி முகாமையாளர் - இலங்கை வங்கி, சுன்னாகம்) அன்புத் தாயாரும் திருமதி நாகபூஷணி நாகரத்தினத்தின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, இராசரத்தினம், சுந்தரமூர்த்தி, திருமதி கந்தையா சிவபாக்கியம், திருமதி நவரத்தினம் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் நிறோஷன் (மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), நிஷாந், நிரந்தரி ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் உரும்பிராய் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மானிப்பாய் வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.* (39648)(43-13-14)
தகவல்:
செ.நாகரத்தினம் (மகன்).

# மரண அறிவித்தல்

## இராமகிருஸ்ணன் சதாசிவம்



கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட இராமகிருஸ்ணன் சதாசிவம் அவர்கள் நேற்று (13.12.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமகிருஸ்ணன் (ஆச்சாரியார்) மற்றும் லெட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் ராணி, காலஞ்சென்ற பாபு ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானகுமாரனின் மாமனாரும் ராதா, உதி ஆகியோரின் ஆசையப்பாவும் பரமசிவம் (வவுனியா), காலஞ்சென்ற நாகராசா மற்றும் சத்தியபாமா, ஜெயமதி, மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உறவினர்கள்.
*இல.82 பூதராயர்*
*கோயில் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு. கல்வியங்காடு.* (சு-39586) (43-13-14)


**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

அஜித் (இருவேடம்), பூஜா நடித்த



**அட்டகாசம்**

தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C-37740)

அடுத்த வெளியீடாக மிகவிரைவில் இந்தியாவிலும் இலங்கையிலும் அர்ஜுன், லைலா, வடிவேல் நடித்த



**ஜெய் சூர்யா**

**ராஜா** யாழ்ப்பாணம்

14 வரை இந்தியாவில் 200 நாள்களுக்குமேல் ஓடிக்கொண்டிருக்கும் சிறந்த படத்திற்கான விருது பெறவுள்ள சிறந்த சித்திரம். குடும்பத்துடன் பார்த்து மகிழவேண்டிய சிறந்த கதை
சேரன், சினேகா, கோபிகா நடித்த



**ஆட்டோகிராப்**

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30 மட்டும் (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
காலை 10.30, 2.30 (பு.நே.)
இளையதளபதி விஜய், சங்கவி நடித்த
**கோயம்புத்தூர் மாப்பிள்ளை** (ரீலீஸ்)
தினசரி இரவு: 6.30, 9.00 (பு.நே.)
ஆங்கிலப்படம் **The Lord of The Rings**

**நிரஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார், லாரா நடித்த
**சித்திரப்பதி** (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.) **SPIDER MAN-2**


## வழுக்கையாறு மயானத்தில் கழிவுகள் கொட்டுவதால் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தல்

வட்டுக்கோட்டை,டிசெ.14

நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்குள் கடந்த சில தினங்களாகப் பாவனைக்கு தவாத கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவது அதிகரித்துள்ளது.

நவாலி வழுக்கையாற்றை அண்மித்த பிரதான வீதியின் அருகில் கொட்டப்பட்டுவநத கழிவுகள் பின்னர் வழுக்கையாறு இந்து மயானத்திற்குள் உழவு இயந்திரங்களில் ஏற்றிவரப்பட்டு கொட்டப்படுவதால் மயானத்தில் துர்நாற்றம் வீசுகின்றது. (எ-161)


**SHAMROCK**
J/ஈச்சமோட்டை வீதி
புதிய கல்வி ஆண்டு 2005
ஆண்டு 3 முதல் 11 வரை
ஆரம்பம்:
15.12.2004
புதன் 3.30 p.m.
★ English medium yr. 6, 7+8
★ English Literature yr. 10 + 11
★ புலமைப் பரிசில் yr. 5 (39624)


# மரண அறிவித்தல்கள்

## ஷறல் தபீதா பரராஜசிங்கம்

**SHARREL TABITHA PARARAJASINGAM**



கிறிஸ்ரி அயந்தன் பரராஜசிங்கம் (ஆசிரியர் St.Johns College) - திருமதி அனோஜி பரராஜசிங்கம் ஆகியோரின் அருமை மகள் ஷறல் தபீதா (SHARREL TABITHA) கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் எலீஷான் டெனுக்ஷனின் (ELSHAN DENUSHAN) அன்புத் தங்கை ஆவார்.

இவரது நல்லடக்க ஆராதனை இன்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இல.113A, வேம்படி வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*881, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (39656)(29-43-13-14)
தகவல்:
கிறிஸ்ரி பரராஜசிங்கம்.

## கந்தையா சுந்தரலிங்கம் (செல்வம்)



கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில், பாடசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் 11.12.2004 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணை - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானாம்பிகை (நகுலம்) அவர்களின் அன்புக் கணவரும் பிரபாகரன் (பிரபா - டோகா), தயாபரன் (தயா), அஜிந்தா, நிஷா, காலஞ்சென்ற கிருபாகரன் (கரன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவசேந்தன் (சேந்தன்), தயாழினி (தயா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தருமலிங்கம், காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், விஸ்வலிங்கம் மற்றும் கனகலிங்கம், செல்வலக்ஷ்மி, அமிர்தலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் சரஸ்வதி, சிவஞானம், கனகாம்பிகை, சந்திரசேகரன், ஞானசேகரன், குணசேகரன், ராதா, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல இணுவில் காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பாடசாலை வீதி,*
*கோண்டாவில்.* (39650)(43-13-14)
தயாபரன் *(தயா),*
சிவசேந்தன் *(மருமகன்).*

## திருமதி புவனேஸ்வரி தியாகராசாக்குருக்கள்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது வடலியடைப்பு பிள்ளையார் கோயிலடியில் வசித்து வந்தவருமான கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி தியாகராசாக்குருக்கள் அவர்கள் நேற்றுமுன்தினம் (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சனாதக்குருக்களின் அன்பு மகளும் தியாகராசாக் குருக்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.12.2004) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*பிள்ளையார் கோயிலடி,*
*வடலியடைப்பு.* (39655)(43-13-14)
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## செல்லப்பா சுப்பிரமணியம்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (13.12.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் மங்களம் (பேபி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கோதநாயகி மற்றும் தேவநாயகி, செல்வநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமியின் மாமனாரும் பிரபாகரனின் (லண்டன்) பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*சித்திவிநாயகர் வீதி,*
*நாவற்குழி மேற்கு, நாவற்குழி.* (39649)(43-13-14)
திருமதி தேவநாயகி கந்தசாமி
(தேவி - மகள்).

# கவிதையாகிக் காவியமானீர்



அயராது உழைப்பதில் அருவி நீர்
இலட்சியமாய் செயல் புரிந்த கருவி நீர்
கடற்புலிகளின் மூத்த உறுப்பினரும்
கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின்
மேலாளருமான

**லெப்.கேணல் மறவன் மாஸ்ரர்**

| மண்மடியில் | மனக்குழியில் |
|---|---|
| 06 - 12 - 1936 | 11 - 12 - 2004 |

மறக்க முடியுமா உம்மை?
மன்னிப்போமா உம்மு உயிர் வாங்கிய
அந்தக் கொடிய நோயை?
ஐயா! கண்முன்னே
கம்பீர நடையுடன் வருவீரே!
மக்களை நேசித்தீர்! ஆறுதல் கூறுவீர்

அனைவரையும் அரவணைப்பீர்
விடுதலைப் போரின் வெற்றிக்கும்
பல்வேறு வழிகளில் பங்காற்றி பாடுபட்டீர்!
வரலாற்றில் உயர்வீர்.
வீரச்சாவடைந்த பல வேங்கைகளுக்கு
காத்திரமான கவிதை வடித்தீர்- இன்று
நீர் கவிதையாகி காவியமானீர்!

(சி-39601)(29-43-13-14)

தமிழ் மாணவர் ஒன்றியம்,
தேசிய எழுச்சிப் பேரவை
வடமராட்சிக் கோட்டம்.

# மறவன் மாஸ்ரருக்கு பருத்தித்துறையில் அஞ்சலி

லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் வித்துடல் நேற்று மாலை வடமராட்சியைச் சென்றடைந்தது. வலிகாம மக்களின் அஞ்சலியையடுத்து அவரது வித்துடல் வல்லை வெளியூடாக நேற்று வல்வெட்டித் துறையைச் சென்றடைந்தது.

வல்வை ஆலடியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் வித்துடல் தாங்கிய பேழை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு மக்கள் பலர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்றிரவு 7.30 மணியளவில் வல்வெட்டித்துறையில் இருந்து குடத்தனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வித்துடல் அங்கும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இன்று காலை 9 மணிக்கு வித்துடல் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் சுப்பர்மடம், திக்கம், நெல்லியடிச் சந்தியில் வைக்கப்பட்டுப் பின்னர் முகமாலையூடாக அவரது உடல் வன்னியைச் சென்றடையும். (எ-6-15-70-173)

## சொக்கனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன. நல்லை ஆதீனகுருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளதும் துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியினதும் இரங்கல் செய்திகள் வாசிக்கப்பட்டன. தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, தமிழீழக் கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், வாழ்நாள் பேராசிரியர் வைத்திய கலாநிதி சிவஞானசுந்தரம் (நந்தி) உட்படப் பலர் கண்ணீர் மல்க அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

அஞ்சலி நிகழ்வுகள் முடிந்ததும் தமிழீழத் தேசியக் கொடியால் போர்க்கப்பட்ட சொக்கனின் பூதவுடல் தாங்கியபேழை தமிழீழ விடுதலைப் புலிகளால் பொறுப்பேற்கப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வைத்து செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. பூதவுடல் தாங்கிய பேழையின் முன்னால் தமிழீழத் தேசியக்கொடி கட்டப்பட்டிருந்ததுடன் வீரவணக்கம் என்று எழுதப்பட்ட வாசகமும் காணப்பட்டது.

செம்மணி மயானத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.கா.ஈழவேந்தன் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி அஞ்சலியுரையில்:-

போராட்ட வரலாற்றில் பல்வேறு இன்னல்கள் ஏற்பட்ட போதெல்லாம் போராட்டமும் தமிழினமும் தமிழ்மொழியும் அழிவடையக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தவர் நாட்டுப்பற்றாளர் சொக்கன்.

இந்திய இராணுவத்துடன் மோதல் ஏற்பட்ட பின்னர் எமது தலைவர் வன்னிக் காட்டுக்குள் இருந்த சமயம் இவர் தலைவரின் சிந்தனைக்கு ஏற்ப பல்வேறு கருத்துக்களையும் அரிய சிந்தனைகளையும் வழங்கி தலைவருக்கு உறுதுணையாக இருந்தவர்.

பண்பால் - உறுதியால் - அன்பால் மேம்பட்டவரை நாம் இன்று இழந்து நிற்கின்றோம் - என்றார். தொடர்ந்து சொக்கனின் பூதவுடல் வைக்கப்பட்ட சிதைக்கு அவரது மகன் கொள்ளி வைத்தார். பெரும் குரலெடுத்து வானம் சோவென அழுது கொண்டிருக்க சொக்கனின் பூதவுடல் தீயுடன் சங்கமமானது. (எ-5)

## விடாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றர் மழை பெய்துள்ளதாக வானிலை அவதான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்முனை - பொத்துவில், கல்முனை - அம்பாறை, அக்கரைப்பற்று - அம்பாறை ஆகிய பிரதான வீதிகளிலுள்ள தாம்போதிகளூடாகத் தற்பொழுது வெள்ளம் பாய்ந்து கொண்டிருப்பதால் சிறிய வாகனங்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மழை தொடர்ந்து பெய்வதாலும் வெள்ளம் அதிகரித்து வருவதாலும் எந்த வேளையிலும் இப்பிரதான வீதிகளூடான போக்குவரத்துகள் முற்றாகத் துண்டிக்கப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் பிரதான பாதையிலுள்ள காரைதீவு - மாவடிப்பள்ளி தாம்போதி, வளத்தாப்பிட்டி - மல்வத்தை தாம்போதி என்பனவற்றிலும் 3 அடிக்குமேல் வெள்ளம் பாய்ந்தோடுகின்றது. இதன் காரணமாகப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய பல விவசாயப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை மழை, வெள்ளம் காரணமாகப் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

காற்றுடன் கூடிய கடல்கொந்தளிப்பும் உக்கிரமடைந்திருப்பதால் கடற்றொழிலாளர்கள் தொழிலின்றி வீடுகளில் முடங்கிக்கிடக்க வேண்டிய அவலமும் ஏற்பட்டுள்ளது.

அரிசி, மீன் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தங்களை அடுத்து அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, நாடாளுமன்ற உறுப்பினர்களான பைஸால் காசீம், கனக சபை பத்மநாதன் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன், நிவாரணங்கள், சமைத்த உணவுகள் போன்ற வற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரி.ஹஸன் அலி ஆகியோர் கொழும்பிலிருந்து பிரதேச செயலாளர்களுடன் தொடர்புகொண்டு மக்களின் பாதிப்பு நிலை தொடர்பாகக் கேட்டறிந்ததுடன், நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

திட்டமிட்டவாறு ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகியுள்ளது. வெள்ளப் பாதிப்புக்குள்ளான கிராமங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் பெரும் சிரமங்கள் அவலங்களுக்கு மத்தியில் பரீட்சைக்குத் தோற்றிவருகின்றனர்.

இதற்கிடையில், திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் அடை மழை காரணமாக அந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென திருகோணமலை புனர்வாழ்வளிப்பு மற்றும் மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் எம்.நஜீப் ஏ மஜீத் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாவட்டத்தில் தாழ்ந்த பிரதேசங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் பொதுக் கட்டடங்களில் தஞ்சம் புகுந்துள்ளன. இதே வேளை, பல வீதிகள் வெள்ளத்தினால் மூழ்கியிருப்பதினால் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேசத்தின் பெரியாத்துமுனை, அடப்பன்னா வயல், பைசல் நகர், ஆறாங்கால், சின்னக் கிண்ணியா, நெடுந்தீவு, இடிமண்பகுதி, பூவரந்தீவு, சமாச்சன்தீவு, வெள்ளைமணல், ஆலங் கேணி மற்றும் மூதூர், கந்தளாய் ஆகிய பிர தேசத்தின் தாழ்ந்த பகுதிகளும், ஈச்சிலம் பற்று, சம்பூர், தோப்பூர் ஆகிய பிரதேசங்களும் வெள்ளத்தினால் நீரில் மூழ்கியுள்ளன. இங்குவாழ்ந்த குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் பொதுக் கட்டடங்களில் தஞ்சம் புகுந்துள்ளன. (எ-க-6)

## சுத்திகரிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தைக் கைவிடுவது என முடிவு செய்தனர்.

இதற்கிடையில் - சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பகிஷ்கரிப்புத் தொடர்பாக ஆராய்வதற்கான சந்திப்பு ஒன்று நேற்றுமாலை 6 மணியளவில் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. மறைக்கோட்ட குரு முதல்வர், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் குருநகர், திருநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இதில் கலந்து கொண்டனர். (எ-7)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தியுள்ளனர். குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் கொண்டுவர சகல முயற்சிகளையும் அவர்கள் எடுத்துள்ளனர்.

அரசுக்கு வெளியேயுள்ள ஒரு குழுவினர் இனப்பிரச்சினைக்குப் பேச்சுமூலம் ஓர் அமைதித் தீர்வு ஏற்படுத்து[illegible] எதிர்த்தே வருகின்றனர். இவர்கள [illegible]த்தையும் ஒழுங்கையும் சீர்குலைப்பதன் மூலம் நாட்டில் அமைதியைக் குலைக்க முனைகின்றனர்.

மற்றும் ஒரு பிரிவினர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் கா[illegible]படும் நட்புறவைச் சிதைக்கவும் இ[illegible] அரசின் மீது தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர்.

இந்த அரசியல் எதிரிகள் பாதாள உலகக் கிரிமினல்களை உபயோகப்படுத்து[illegible]ன்றனர். பாதாள உலகக் கும்பல்களுக்கு எதிராக அரசு மேற்கொண்டுவரும் கடும் நடவடிக்கைகளுக்கு எதிராக இக்கும்பல்களைப் பயன்படுத்துகின்றனர்.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் சட்ட விரோதச் சக்திகளை வேரோடு அகற்றவேண்டும் என்ற அரசின் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தியுள்ளது என அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு மாவட்டங்களிலும் உள்ள நடுத்தர, பாரிய குளங்கள் எல்லாம், நிரம்பி வழிகின்றன. பாரிய குளமான இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் உயர்ந்ததால், 3 ஆயிரத்து 450 கன அடி நீர் வெளியேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்டிய திருநகர் பகுதியைச் சேர்ந்த நூறு குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளன என்றும் -

அவர்களுக்குச் சமைத்த உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் - கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் தாழ்ந்த பிரதேசமான அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய அபாய நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நகரப் பகுதியில் - தாழ்ந்த பகுதியில் - உள்ள உணவகங்கள் உட்பட வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது என்றும் -

இதனால், மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்யமுடியாது அவதிப்பட்டனர் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

**யாழ்ப்பாணத்தில்**

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை முதல் மழை பெய்து வருகின்றது. தாழ்ந்த பகுதிகள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. (எ-3-381-352-301-393)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.14

இன்று மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் மருத்துவ மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து மருத்துவ மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (எ)

## மீள்குடியமர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் சம்பவ இடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

செயலகத்தை மூடிவைப்பதால் பொதுமக்கள் பாதிக்கப்படுவர். எனவே, மக்கள் தமது பிரச்சினை குறித்து அரச அதிபருடன் கலந்துரையாடி பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று பொலீஸார் போராட்டக்காரர்களிடம் கோரினர்.

இதை ஏற்றுக்கொண்ட போராட்டக்காரர் அரச ஊழியர்களைச் செயலகத்துக்குள் செல்ல அனுமதித்தனர்.

பின்னர் அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்துத் தமது கோரிக்கை அடங்கிய மகஜரைக் கையளித்தனர். முற்பகல் 11.30 மணிக்குத் தமது போராட்டத்தை முடிவுக்குக்கொண்டு வந்தனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் தங்களுக்குக் கொடுப்பனவு வழங்காவிட்டால், அதன்பின் யாழ்.செயலகம் முன் தொடர் மறியல் போராட்டத்தை நடத்துவோம் என்று போராட்டக்காரர் தெரிவித்தனர்.

இம்மாதத்தில் செயலகம் முன் நடந்த மூன்றாவது மறியல் போராட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-3-5)

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு சிறைச்சாலைகள் ஆணையாளரைச் சேர்ந்தது.

**சபையின் நடவடிக்கை**

எஸ்.பியை விடுதலை செய்வதற்கான நடவடிக்கை நாடாளுமன்றத்திலும் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றம் அடுத்து கூடும்போது இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடாளுமன்றத்தின் ஊடாக மாற்றமுடியாதென்று ஜனாதிபதி கூறுகிறார். அது அவரின் அபிப்பிராயம் மட்டுமே.

ஆனால், இது தொடர்பில் நாம் சட்ட நிபுணர்களுடன் ஆராய்ந்தோம். நாடாளுமன்றத்தினூடாக இதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியுமென்பது எமது கட்சியின் அபிப்பிராயம். எனவே, அதற்குரிய நடவடிக்கைகளை நாம் உடனடியாக எடுப்போம். நாடாளுமன்றத்தில் 113 பேரை இதற்காகத் திரட்டிக்கொள்ள எம்மால் முடியும். ஜனநாயக வரம்புக்குள் நாம் இதனை மேற்கொள்வோம்.

**முரண்பாடு இல்லை**

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடு இருப்பதாக ஜனாதிபதி கூறினாலும், எமது கட்சிக்குள் முரண்பாடு ஏதும் இல்லை. நாம் வீணே அலட்டிக்கொள்ளாமல் எமது செயற்றிட்டங்களை முன்னெடுத்துவருகிறோம். கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் எஸ்.பி.திஸநாயக்க தொடர்ந்து இருப்பார். நாட்டின் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாக்க ஐ.தே.க. உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் - என்றார் கரு ஜயசூரிய.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ருக்மன் சேனாநாயக்கவும், கரு ஜயசூரியவுடன் சிறைச்சாலைக்குள் சென்று திஸநாயக்கவை நேற்றுப் பார்த்தார். (எ-க)

# மரண அறிவித்தல்கள்

## பூதத்தம்பி சந்திரமெளலீசன்

(ஓய்வுபெற்ற நீதிமன்ற ஊழியர், சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பூ.சந்திரமெளலீசன் அவர்கள் 11.12.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நிலாசினி (அமெரிக்கா), முரளீதரன் (அமெரிக்கா), தேவபாலன் (கனடா), ஜேபாலன் (இறுதியாண்டு - எந்திரவியல் மாணவன் - பேராதனைப் பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயன், கோகிலவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும் அபினா, ஆரணி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.தேவபாலன் (மகன்)
தொ.பே.இல. 0777 368471

கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி. (39654)(33-13-17-29)

## வரதலிங்கம் துரைராஜா

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வரதலிங்கம் துரைராஜா நேற்று (13.12.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் சண்முகாதேவி (லண்டன்), மனோகௌரி ஆகியோரின் தந்தையும் முரளிதரனின் (லண்டன்) மாமனாரும் சேயோன், திபியன் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2004) செவ்வாய்க்கிழமை ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.தர்மலிங்கம்
(மைத்துனர்).

இணுவில் தெற்கு. (C/39603)(29-13-17)


**BARATHY**
சித்தன்கேணி

புதிய வகுப்புகள்
தரம் 5 முதல் 11 வரை
ஆரம்பம் – 15.12.2004 புதன் 8.00 a.m.
எமது தனித்துவமும் அதி திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | - | திரு. தேவா |
| | - | திரு. பாலச்சந்திரன் |
| கணிதம் | - | திரு. சிவரூபன் |
| | - | திரு. சிவா |
| தமிழ் | - | திரு. குகபரன் |
| | - | திரு. தமிழ்மாறன் |
| ஆங்கிலம் | - | திரு. விஜயபாஸ்கர் |
| | - | திரு. திலகர் |
| சமூகக்கல்வி | - | திரு. சுதன் |
| | - | திரு. சிவபாலன் |
| சமயம் | - | திரு. தரன் |
| | - | திரு. சிறிகரன் |
| வர்த்தகம் | - | திரு. லோகேஸ்வரன் |
| சுகாதாரம் | - | திரு. நிறோஜனன் |

புலமைப்பரிசில் வகுப்பு (தரம் 5)
திரு. கலாமோகன்

குறிப்பு: மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் எமது நிறுவனம் தவிர்ந்த வேறு எந்தக் கல்வி நிறுவனத்திலும் கற்பிக்க மாட்டார்கள்.

மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது
தரம்:- 6,7,8 - 40 மாணவர்களுக்கு
தரம்:- 9,10,11- 80 மாணவர்களுக்கு
அனுமதி வழங்கப்படும்.
அனுமதியினை முன்கூட்டிப் பெற்றுக்கொள்ளவும்.
(c/39597)(29-13-17)



**BRIGHTMAN**
நாவலர் வீதி, யாழ்நகர்.
ENGLISH LITERATURE
GRADS 9,10 And O/L
BY:
PN.SUTHARSON
(Spl.Trd.Eng.)
ஆரம்பம்:
15.12.2004
Wed. 7.00.
(39644)



**SUBRA (14)**
சித்தன்கேணி
SPOKEN ENGLISH
&
GRAMMAR
By: BRITTO
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.
செவ்., வியா., காலை 7.30 - 8.30
பௌதிகவியல்
A/L 2005
வர்ணன்
PAPER CLASS
Sat., Sun., 6-8 p.m.
அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.
இன்று ஆரம்பமாகின்றது
தரம் 3 முதல் O/L வரை
புதிய பிரிவுகள்.
(C/39531)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.